விலை ரூபா:5.00 பக்கங்கள் பத்து *Registered as a News Paper in Srilanka*

# வலம்புரி
VALAMPURI

சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 18 புதன்கிழமை (02.01.2002) தொலைபேசி 3378 ஒலி 14

மல்லிகா மிக்சர் மாளிகை
நறு நறு மொறு மொறு
காரமான சுவையுடன்
ரேஸ்ற்றி பொம்பே ரிப்பீஸ்
ரேஸ்ற்றி ரைற்றானிக் காரவடை
ரேஸ்ற்றி மரவள்ளி பீஸ்
இல 149, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.

## அரசு-புலிகள் சமாதானப்பேச்சு

# நோர்வேயின் மத்தியஸ்தத்திற்கு விடுதலைப்புலிகள் பச்சைக்கொடி!

**கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் முதலில் சந்திப்பு**

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் மீண்டும் நோர்வே அனுசரணையாளராகச் செயற்படுவதற்கும் அவர்களது மத்தியஸ்தத்தை ஏற்பதற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் பச்சைக் கொடி காட்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த தேர்தலில் ஐக்கியதேசிய கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணையின் அடிப் படையில் சமாதானப்பேச்சுக்கான கதவுகளை புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா திறந்து விட்டுள ளார்.

விடுதலைப்புலிகளுடனான சமாதான பேச்சுக்களுக்கு அனுசரணையாளராக இருந்து செயற்படும்படி பிரதமர் ரணில் நோர்வேக்கு விடுத்த அழைப்பை நோர்வே அரசு ஏற்று நோர்வேயின் பிரதியமைச்சர் தலைமையில் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாட் டாளர் குழுவென்றையும் நியமித் துள்ளது. பிரதமர் ரணிலின் வேண்டுகோளுக்கமைய அரசுக் கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் வகித்து சமாதானப் (10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் அத்துக்கோறளை நேற்றுக் காலமானார்

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் விமானப்போக் குவரத்து அமைச்சருமான காமினி அத்துக்கோறள திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக நேற்றுக் காலமானார் இறக்கும் போது அவருக்கு வயது 51

நடந்துமுடிந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டு ஒருஇலட்சத்து நாற்பதாயிரத்து ஐம்பத்திநான்கு விருப்புவாக்கு களை பெற்று மக்கள் பிரதிநிதி யானார்.

(10டம் பக்கம் பார்க்க)

**சார்க் மாநாட்டுக்கு ஜனாதிபதி இன்று பயணம்**

# இனப்பிரச்சினை தொடர்பாக வாஜ்பாயுடன் இன்று பேசுவார்

(கொழும்பு )

இம்மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாளை காத்மண்டூர் செல்லவுள் ளார்.

காத்மண்டூர் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பய்யுடன் பேசவிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பின்போது பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுடன் இந்தியப் பிரதமர் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (வ)

## துப்பாக்கிச் சூட்டில் இரு பெண்கள் காயம்

**அதிர்ச்சியால் ஒருவர் மரணம்**

(மட்டக்களப்பு)

புத்தாண்டை வரவேற்க படையினர் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் இருபெண்கள் காயமடைந்துள்ளனர். மட்டக்களப்பு புறநகர் பகுதியில் நேற்று நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

புத்தாண்டை வரவேற்கும் வகையில் படையினர் மகிழ்ச்சி வேட்டுக்களை சரமாரிய தீர்த்த வேளையில், வீட்டில் உறக்கத் திலிருந்த பெண்மணியும் தேவா லையத்தில் வழிபாட்டிலிருந்த பெண்மணியும் துப்பாக்கிச் சன்னம் பட்டு காயமடைந்துள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கு உட்பட

## வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர்

## வடக்குக் கிழக்கு உட்பட

# உள்ளூராட்சி சபை தேர்தல் நாடுபூராகவும்நடைபெறும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல மாகாணங்களிலும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடாத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தேர்தலை நடத்துவது தொடர்பாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு இம் முடிவை எடுத்துள்ளதாக உள் நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.


14மாகாணசபைகள், 38நகர சபைகள் மற்றும் 258பிரதேசசபைகளுக்கும் தேர்தல் நடத்தப்பட உள்ளது.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது தொடர்பாக பின்னர் அறிவிக்கப

(10ம் பக்கம் பார்க்க)

## வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர்

# திரிலோகநாதன் தலைமறைவு!



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைத்தலைவர் ந.திரிலோகநாதன் தலைமறைவாகி உள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காத நிலையில் திரிலோகநாதன் யாழ்மாவட்டத்திலிருந்து வெளியேறி கொழும்பு மாவட்டத்தில் தலைமறைவாகி இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணமாகிய செய்திகள் ஈ.பி.டி.பியின் யாழ் தலைமைச் செயலகத்துக்கு தெரியாதெனவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு முக்கிய பிரமுகர்களே திரிலோகநாதனை கொழும்புக்கு தப்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்ததாகவும் தகவல்கள் கசியத்தொடங்கியுள்ளன.

திரிலோகநாதன் கொழும்புக்கு செல்வதற்கு முன்னதாக பலாலி படைத்தளத்தில் தம்வசம் வைத்திருந்த கைத்துப்பாக்கியை ஒப்படைத்து விட்டு இராணுவ விமானத்தில் கொழும்பு சென்றதாகவும் வலி மேற்கு பிரதேச மக்கள் பரவலாக பேசிக்கொள்கின்றனர்.

(10ம் பக்கம் பார்க்க)




# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2002ம் ஆண்டு புதிய கல்வியாண்டின் முதலாந் தவணைக்காக விடைத்தாள்கள் திருத்தும்பணி நடைபெறும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் இன்று ஆரம்பமாகின்றது. (இ)

## அரசு–புலிகள் பேச்சு

# எதிர்க்கட்சி சார்பில் கதிர்காமர் நியமனம்?

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடம் பெறவுள்ள சமாதானப் பேவ்வு வார்த்தையில் கலந்து கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் சார்பில் முன்னள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியின் அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்க்கட்சிகளிடம் விடுத்தவேண்டுகோளை அடுத்தே

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரதேச வேறுபாடுகளைக் களைந்து தேச நலனுக்காய் பாடுபடுகின்ற தமிழ் பத்திரிகை இன்னமும் ஈழத்தில் உருவாகவில்லை

## வானொலி அறிவிப்பாளர் தயானந்தா கருத்து

(யாழ்ப்பாணம்)

'தேசத்திற்காய் எழுதுகின்ற ஒருபத்திரிகையை நாம் இன்னும் உருவாக்கவில்லை' இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வானொலியின் அறிவிப்பாளர் இளையதம்பி தயானந்தா.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முழுநிலாநாள் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அங்கு 'ஈழத்து மண்ணில் தமிழ் ஊடகங்கள்' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கிய தயானந்தா தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று கொழும்பில் வெளியாகிக் கொண்டிருக்கின்ற மூன்று தேசியப் பத்திரிகைகளும் ஒரு குறுகிய நலனை முன்னிறுத்தியே செயற்படுகின்றன. வீரகேசரி மலையகத் தமிழர்களுக்காகவும் தினக்குரல் யாழ்ப்பாணத்தை பிரதிபலிப்பதாகக் கொண்டவர்களுக்காகவும் தமது கருத்துகளை வெளியிட்டு வருகின்றன.

தினகரன் முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் பார்வையிடும் பத்திரிகையாக இருக்கின்றது.

இவை எல்லாவற்றையும் கடந்து தேசத்திற்காய் குரல் கொடுக்கின்ற பத்திரிகையை நாம் இன்னும் காணவில்லை.

எமது பத்திரிகைகள் தலையங்கங்கள் மூலம் மக்களைக் கவரும் தன்மையைக்கொண்டிருக்கின்றனவேயொழிய படிக்கக்கூடிய செய்தி ஏடுகளாக அவை இன்னும் மாறவில்லை.

ஆனால் இந்து போன்ற பத்திரிகைகளின் தரம் என்றுமே குன்றியது கிடையாது அவற்றின்செய்திகள், உள்ளே மேலும் விரித்துச் செல்லும் போது பல தகவல்களை அள்ளி வழங்குவனவாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகள் உண்மைகளை மூடி மறைக்காது செயற்பட்டன அதனால் அவை பல எதிர்விளைவுகளையும் சந்தித்தன.

இலங்கையில் வல்லமை பொருந்திய ஊடகங்களின் தலைமைப் பதவிகளில் இருப்பவர்கள் சிறுபான்மை இன மக்களின் மொழிபற்றிய போதிய அறிவைக்கொண்டிராத காரணத்தினால், பல தவறுகள் நேர்ந்துவிடுகின்றன.

இந்தத் தன்மை இலத்திரனியல் ஊடகங்களுக்கும் அச்சு ஊடகங்களுக்கும் பொருந்தும்.

செய்தி ஊடகங்களில் வானொலிக்கு என்று தனித்துவமான இடம்இருந்தே வருகிறது. கற்பனைகளுக்கூடாக எந்த விடயத்தையும் இரசிக்கும் தன்மையை வளர்த்துவிடுவது வானொலியே என்றார். (உ-106)

## ஒன்றுகூடல்

(சுன்னாகம்)

யாழ்/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய உயர்தரமாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் 5ம்திகதி சனிக்கிழமை நண்பகல் 12.30மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (207)

## கண்டபாட்டில் கட்டணம் அறவீடு

(துன்னாலை)

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய சிற்றூர்திச் சேவையில் கட்டண அறவீடுகள் வேறுபடுவதாக மக்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## மீண்டும் 'தேர்தல் நடத்த நீதிமன்றில் மனுதாக்கல்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில நடந்துமுடிந்த தேர்தல் முடிவுகளை இரத்துச்செய்து மீண்டும் தேர்தலை நடத்த வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நுவரெலியாமாவட்ட ஐ.தே.கட்சி வேட்பாளர் என்.சே.ஹியத் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்ட சமயம் பலகுறைபாடுகள் நிலவியதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிலவாக்கு நிலையங்களில் தமக்கு அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகள் எண்ணப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-8)

## சமய அறிவுப்போட்டி எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வலயக் கல்விப்பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் இம்மாதம்23ந் திகதி நடத்தப்படவிருந்தது தவிர்க்க முடியாதகாரணத்தினால் பிற்போடப்பட்ட 4பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப்போட்டிக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 6மதிகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30மணிக்கு பின்வரும் 4 நிலையங்களிலுள்ள ஆறு பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வடமராட்சி- யா/வடஇந்து மகளிர் கல்லூரி

யா/உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப்பாடசாலை

வலிகாமம்- யாழ்/இராமநாதன் கல்லூரி

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

யாழ்ப்பாணம்- யா/இந்துமகளிர் கல்லூரி

தீவகப்- யா/சைவப்பிரகாச வித்தியாசாலை,வேலணை

(உ)

## சைக்கிள் திருடியவர் விளக்க மறியலில்

யாழ்.நகரப்பகுதியில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த நபர்ஒருவர்யாழ்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டபோது மேற்படி சந்தேகநபரை எதிர்வரும் 9ம் திகதிவரையும் விளக்கமறியலில்வைக்கும்படி நீதிபதி இளஞ்செழியன் ராஜா உத்தரவிட்டார்.

நகரப்பகுதிகளில் காணப்படும் சைக்கிள்களை கள்ளத் திறப்பை பயன்படுத்தி 12 வயது சிறுவனின் உதவியுடன் களவாடி வந்தநபர் எனவும் இவர்மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் அப்பகுதி வந்தவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

University of Jaffna
**Faculty of Graduate Studies**
Commencement of First Semester Post Graduate Diploma in Public Administration Course 2001/2002
The First Semester of the Postgraduate Diploma in Public Administration will commence on 2002.01.05 (Saturday) at 9.00 a. m. Course detail is available in the Faculty of Graduate Studies, University of Jaffna.
Letters have already been sent to the selected candidates. Registration formalities should be completed before 2002.01.10
REGISTRAR
University of Jaffna
20012.1.31 (C 3151)

## சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கவேண்டும்

### டக்ளஸ் எம். பி விருப்பம்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் போர்நிறுத்தமும் அரசாங்கத்தின் மோதல் தவிர்ப்பும நீடித்துவரும் சூழலில் எப்போது சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்பதுவே பெருமபாலான மக்களின் எதிர் பார்ப்பாக உள்ளது.

பேச்சுவார்த்தைகள் எந்த அளவுக்கு விரைவாக ஆரம்பமாகிறதோ அந்தஅளவுக்கு விரைவில் மக்கள் அமைதி மற்றும் நிம்மதியான வாழ்வுக்கு திரும்புவது சாத்தியமாகும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர்நாயகமும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுபபினருமான டகளஸ் தேவானந்தா விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுளளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

புதிதாகப் பதவிஏற்றுள்ள பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது வீதித்தடைகள் அகற்றப்பட்டமை முதல் பொருட்களின் விநியோகத்திற்கான ஏற்பாடுகள்வரையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நோர்வே அரசாங்கத்திற்கு உத்தியோக பூர்வமாக கடிதம் எழுதியுள்ளது முதல் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான அரசாங்ககுழு நியமிக்கப்பட்டது வரைமுன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்பேசும் மக்களில் பெரும்பான்மையினர் புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் எனவும் சமாதானத்தீர்வு காணவேண்டும்என வும் எதிர்பார்க்கின்றனர்.

எனினும் சமாதானமுயற்சிகளில் ஈடுபடுவதற்குநோர்வே அரசாங்கத்தை புலிகள்இன்னும் உத்தியோக பூர்வமாக அழைக்கவில்லைஎன்று செய்திகள் வெளிவருகின்றன.

எனவேநோர்வே அரசாங்கத்திற்கு புலிகள் உத்தியோக பூர்வ அழைப்பை உடனடியாக வழங்குவதற்கு ஏற்ற வகையில் வடக்குகிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தம செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## அத்துக்கோரளையின் மறைவுக்கு ஈ. பி. டி. பி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான காமினி அத்துக்கோரள நேற்று திடீரென உயிரிழந்தமை தமக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக, ஈ.பி.டி.பி தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாககட்சியின் செயலாளர்நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் விமானப் போக்குவரத்துதுறை அமைச்சர் காமினி அத்துக்கோரள அவர்கள் அகாலவேளையில் உயிரிழந்த செய்தி மிகவும் அதிர்ச்சிதருவதாகும். ஐ.தே. கட்சியின் முன்னணித் தலைவர்களில் முக்கியமான ஒருவராக இருந்த காமினி அத்துக்கோரள, எதிர்காலம் குறித்து புதிய நம்பிக்கைகளும், புதிய எதிர்பார்ப்புகளும் மலர்ந்துள்ளஇத்தருணத்தில்எவரும் எதிர்பார்க்காத வகையில் எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

காமினி அத்துக்கோரள அவர்களின் கடந்தகால அரசியல் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. இரத்தினபுரி மாவட்ட மக்கள் மத்தியில் மிகுந்தசெல்வாக்குப் பெற்றவரான அன்னார் இனங்களுக்கு இடையிலான ஐக்கியம் புரிந்துணர்வு என்பன வளரவேண்டும் என்பதில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தவர்.

அன்னாரது மறைவினால் துயரப்படும் ஒவ்வொருவரது சோகத்திலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியங்குகொள்கிறது. ஈ பி டி. பியின் சார்பிலும் தமிழ் பேசும் மக்களின் சார்பிலும் மறைந்த காமினி அத்துக்கோரள அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்த கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும். சகோதரத்துவ தினமாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் புதுவருடப் பிறப்பன்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த அமரர் காமினிஅத்துகோரள அவர்களின்நினைவுகள் எப்போதும் வாழும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
450 கிராம் பாண் விலை மாற்றம்
31.12.2001 இல் .அரசாங்க அதிபர் தலைமையில் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேக்கரியில் மட்டும் 450 கிராம் பாணின் விலை ரூபா 14.00 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்,
317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
நிர்வாகம். யா; மா. பே. உ. சங்கம்
(C-3105)

தேவை
சகல வேலைகளும் செய்யக்கூடிய கொம்போசிற்றர் தேவை.
பெண்பிள்ளை விரும்பத்தக்கது.
நேரில் தொடர்பு கொள்ளவும் ;
★ சரவணா அச்சகம் ★
233, ஆஸ்பத்திரி வீதி,
( சத்திரச் சந்திக்கு அருகாமை )
யாழ்ப்பாணம்.
(இ-3152)

# கடற்றொழில் தடையை நீக்காதவிடத்து வெகுஜனப் போராட்டம் வெடிக்கும்

## புதிய அரசுக்கு ஒருமாத அவகாசம்

(திருநெல்வேலி)

கடற்றொழிலாளர் மீதான கெடுபிடிகள் நீக்கப்பட்டு அவர்கள் மீண்டு இயல்பு நிலையில் தொழிலில் ஈடுபடும் வகையில இன்றல் இருந்து ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எம் உரிமைகளை வென்றெடுக்கப் போரிடுவது தவிர்க்க முடியாததாகி விடும

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசம், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில், வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து 11 வருடங்களாக வாழ்ந்து வரும் கடற்றொழிலாளர் குடும்பங்களும், வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து 3 வருடங்களாக வாழ்ந்து வரும் கடற்றொழிலாளர் குடும்பங்களும் உட்பட அனைத்துதொழிலாளர்களும் தனிமனித சுதந்திரத்துடன் தாம் நினைத்தவாறு வடமராட்சிக் கடலில் தொழில் செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

பல வகையான கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் குறித்த நேரத்தில் மட்டும தொழில் செய்வதற்கு அனுமதியும், கடலில் குறித்த தூரத்திற்கு மட்டும் செல்லக் கூடியவகையில் அனுமதியும் வழங்கப்பட்டு சில கிராமங்களில் யாரும் கடலில் இறங்கக் கூடாது என தொழிற்றடையையும் படையினர் ஏற்படுத்தியுள்ளனர்;

இந்நிலையின் கீழ் தடைப் படுத்தப்பட்ட பிரதேசமான திக்கம்தொடக்கம். தொண்டமானாறு வரை வாழும் கடற்றொழிலாளர் குடும்பங்கள் மிகவும் பாரிய கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள் பிள்ளைகள் பாடசாலைச் செல்லமுடியாத நிலையில் கல்வி பாழ் போகிறது.

கடந்த 6மாதகாலமாக இந்நிலை தொடர்ந்து வருகின்றது. இதனால் சொல்லொணா துன்பதுயரங்களை அனுபவித்து வருகிறார்கள்.

பாதிப்பு ஏற்பட்ட கடற்றொழிலாளர்களுக்கென மீனவநிவாரணம் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டுவருகின்றது.

இந் நிவாரணமானது ஒரு மாதத்திற்கு 5 அங்கத்தவர்களை கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஆயிரத்து 260 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டின் பொருளாதார நிலை உச்சக்கட்டத்தை அடைந்த போதிலும், இத்தொகையில் எந்தமாற்றமும் ஏற்படவில்லை. ஏற்படுத்ததவுமில்லை. என்பதையும் சுட்டிக் காட்டவிருப்புகின்றோம்

முன்னைய ஆட்சியாளர்களின் காலத்தில் பாதுகாப்பு காரணங்களை மேற்கோள் காட்டி மனித உரிமைகள் மறுக்கப்பட்டு கடற்றொழில் முடக்கப்பட்ட நிலையில் வறுமையின்கோரப்பிடிக்குள் எம மவர்கள் தள்ளப்பட்டனர்.

இதே போன்று தங்களின் புதிய அரசும் பாதுகாப்பு என்ற போர்வையில் எம் இனத்தைக் கொடுமைப் படுத்த முற்பட வேண்டாம் மனித நேய அடிப்படையில் எமது கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க பின் வரும் கோரிக்கைகளை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

★ பாதுகாப்பு படையினரின் கெடுபிடிகள் இல்லாமல் தனி மனித சுதந்திரத்துடன் எந்த நேரத்திலும் கடலில் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும்.

★ தடை செய்யப்பட்ட பிரதேசமான திக்கம் தொடக்கம் தொண்டமானாறுவரை உள்ள கடற்றொழிலாளர்கள் கத்தம் பகுதிகளில் தொழில் செய்ய உடனடியாக அனுமதிக்க வேண்டும்.

★ கடந்த கால வன்செயல்களாலும் இடப்பெயர்வுகளாலும் இழந்த வலை உபகரண இழப்பீடுகளை தொழில் உபகரணங்களாக வழங்கி உதவ வேண்டும்.

★ வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களின் குடிமனைகளை புனரமைக்க உதவ வேண்டும்.

★ தென்னிலங்கையில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மானிய உதவிகள் அனைத்தும் எமது பகுதி கடற்றொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

மேற்படி எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு தொழில் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு தாங்கள் உடனடி தீர்வு கண்டு எமது மக்களின் சந்தோசமான வாழ்வுக்கு வழி அமைப்பீர்கள என நம்புகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-43)

## உள்ளூராட்சிதேர்தல் செயலகத்தில் முன்னேற்பாடு

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் பெப்ரவரி மாதமளவில் நாடு பூராகவும் நடத்தப் படவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான நேர்தல் தொடர்பான முன்னேற்பாடுகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது.

எந்த நேரமும் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் இடம் பெறலாம் என்ற எதிர் பார்ப்புடனேயே இவ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ-10)

## சங்கானைவைத்தியசாலை அம்புலன்ஸ் சேவை சீரில்லை

(யாழ்ப்பாணம்)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் சேவைக்கென அம்புலன்ஸ் உள்ள போதிலும், சாரதி ஒருவர் மட்டும்ம கடமையாற்றுவதால் அம்புலன்ஸ் சேவையை உரிய வகையில் நடத்தமுடியாதிருப்பதாக கூறப்படுகிறது.

கடந்தவாரம் ஊரடங்கு வேளை, ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட யுவதி ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யா/போதனா வைத்தியசாலைக்கு மாற்ற முடியாதுபோனதால் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அம்புலன்ஸ் உள்ளபோதும் சாரதி இன்மையால் இவ்வாறான சம்பவங்கள்மேலும் அதிகரிக்கக்கூடும் என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (உ-4)

## ஒத்துழைப்பு அமைச்சின் உயர்மட்டக் கூட்டம்

[கொழும்பு]

ஒத்துழைப்பு அமைச்சின், உயர்மட்டக் கூட்டம் இந்த வருட முடிவில் இலங்கையில் நடைபெறும் என வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

பங்களாதேஷ், இந்தியா, தாய்லாந்து, மியன்மார், இலங்கை ஆகிய நாடுகள் இதில் அங்கம வகிக்கின்றது.

இந்த அமைப்பின் கூட்டம் கடந்த வருடம் மியன்மாரில் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## நிறை குறைந்த பாண் விற்றவரிடம் தண்டம் அறவிடு

[யாழ்ப்பாணம்]

நிறை குறைவான பாணை தயாரித்து விற்றதற்காக உரும்பிராயைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளரும், வர்த்தகருமான நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு 400 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

கடந்த 13ம் திகதி இடம் பெற்ற இவ்வழக்கை விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் தாக்கல்செய்திருந்தமைஇங்கு குறிப்பிடத்தக்கது.

நிறை குறைவான பாணை தயாரித்து விற்கவேண்டாமென பாண் உற்பத்தியாளருக்கு பொறுப்பு வாய்ந்த அமைப்புகள் எச்சரிக்கை விடுத்திருந்தமை ஏற்கனவே தெரிந்ததே. (க)

## மகப்பேற்று நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் நிதியுதவியுடன் அரியாலை கலைமகள் வீதியில் அமைக்கப்பட்ட மகடபேற்று நிலையம் மருந்தகம் என்பன இன்று யாழ் மாநகர பிரதி மேயர் எஸ்.கந்தையனால் திறந்து வைக்கப்படவுள்ளன.

(உ-19)

## கலப்படமான பெற்றோல் விநியோகம்

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் கலப்படமான பெற்றோல் விற்பனையாவதாக எரிபொருள் பாவனையாளர்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது. (உ-41(

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக்கிளை நடத்திவரும் உதைபந்தாட்டப்போட்டித் தொடரில் நாளை வியாழக்கிழமை பி.ப 3 30 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணக்கல்விக் கோட்டம் எதிர் தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம் என்பன மோதவுள்ளன. (உ)

## வீதி புனரமைக்க கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குபகுதிக்குரிய வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படா திருப்பதால், அனுபவிக்கும் இன்னல்கள் குறித்து சுட்டிக்காட்டி மணற்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் நெல்லியடி, கரவெட்டி வீதி அபிவிருத்தித்திணைக்களத்திற்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

(உ-43)

## மீள்பிடியியல் பாடநெறி தகுதியான ஆசிரியர்களை பாடசாலைகளில் நியமிக்குக

(திருநெல்வேலி)

சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகளில் க.பொ.த (சா-த)பாட விதானத்தில் கல்வி அமைச்சினால் தொழில் முன்னிலைப் பாடங்கள் வரிசையில் கடல்நீர் உயிர் வளத் தொழில் நுட்பம், நன்னீர் உயிர்வளத் தொழில் நுட்பம் ஆகியஇருபாடங்கள் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

பெருந்தொகையான மாணவர்கள் இப் பாடங்களைக் கற்க ஆர்வம் கொண்டிருக்கின்ற போதிலும், தகுதி வாய்ந்த ஆசிரியர்கள்இன்மையால் பாடசாலைகளில் போதிக்கப்படுவதில்லை.

எனவேகாலதாமதமின்றி இவ்வாசிரிய நியமனங்களையாழ் பல்கலைக் கழகத்திலிருந்து மீன்பிடியியல் டிப்ளோ மா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்துவெளியேறியமாணவர்களூடாக வழங்குவதற்கு நடவடிக்கைஎடுக்கவேண்டுமென கோரி வடமராட்சி வடக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

(உ-43)

## நோயாளர் கப்பல் சேவை மீண்டும் வெள்ளி ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையேயான சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நோயாளர் கப்பல் சேவை எதிர் வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த சில வாரங்களாகத் தடைப்பட்டிருந்த இச்சேவை மீண்டும்ஆரம்பிக்கப்படவுள்ளதையடுத்து இக்கப்பல் சேவையின் ஊடாக குடாநாட்டிற்கான வெளியூர் தபால்பொதிகள் எடுத்து வரும் சேவை தங்கு தடையின்றி தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-10)

## கம்பியுள் சிக்கி வீழ்ந்து சிறுப்பிட்டிவாசி படுகாயம்

(நவக்கிரி)

அச்சுவேலியில், இருந்து இராசவீதியூடாக சேவையில ஈடுபட்டிருந்த பேருந்துடன், படையினரின் காவலரணிற் காணப்பட்ட கம்பி இழுபட்டுச் சென்றதால் பின்னால் சென்றவர் அதனுள் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் தொழிற்பேட்டை சந்திக்கு அருகாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அச்சுவேலிச் சந்தையில் விற்பதற்காக வாழைக்குலை எடுத்துச் சென்ற சிறுப்பிட்டியைச்சேர்ந்த ஐயாத்துரை கனகசபாபதி(வயது50) என்பவரே பலத்த காயமடைந்தவராவார்:

இதேவேளை, மற்படி கம்பிக்குள் சிக்குண்டு இன்னுமொருவரின் மோட்டார் சைக்கிளும் சேதத்திற்குள்ளானதாக தெரியவந்துள்ளது.

(உ233)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக யாழ் கல்வி வலய மேலதிகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நேர் முகப் பரீட்சை யாழ் கல்வி வலயப் பணிமனையில் இடம் பெறும் என்றும் ஆயிரத்து 223 பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கு இப்பரீட்சை நடைபெறும் என்றும் அவர்களுக்கு இது குறித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை இம்மாதம் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக முன்பு அறிவிக்கப்பட்டதில் இப்போது மேற்படி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [எ-9]

## வலயக்கல்வி பணிப்பாளர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குமான கூட்டம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில்இடம்பெறவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. [உ9-]

# ஆங்கில மொழியில் இலக்கியங்களை ஆக்கி 'பொதுநலவாய இலக்கியப்பரிசி'னைப் பெறுவீர்

**மறைவாக நமக்குள்ளே பழம்பெருமைபேசுவதில் மகிமை இல்லை ஈழத்துப் பூதத்தேவனாரின் ஆக்கங்கள் கடைச் சங்கத் தொகை நூல்களில் இடம் பெற்றன என்று பழம் பெருமை பேசும் நாம் தம் பிரதேசத்தில் நடைபெறும் பிற மொழி இலக்கிய முயற்சிகளைப் பற்றி அறியாது இருக்கிறோம். தூரத்து உலக மொழிகளில் வருவனவற்றைப் பற்றி அறியா விடினும் நமக்கு 150 ஆண்டுகள் பரிச்சயமான ஆங்கிலத்தில் நம்மைப் போன்ற (முன்னாள் அடிமை நாட்டினர்) எழுதுபவற்றையேனும் அறியாதிருப்பது விரும்பத்தக்கது அன்று உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் ஆக்கங்களுக்கு ஒரு சங்கப் பலகை ஏற்படுத்த முடியுமானால் . . . . .**

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஆங்கில இலக்கியம் என்றால் ஆங்கிலேயராலும் அவர்கள் சந்ததியினரான அமெரிக்கராலும் எழுதப்பட்டவையே என்ற கருத்து நிலவி வந்தது. ஒரு தாகூர், சரோஜினி நாயுடு, ஒரு ஆர். கே. நாராயணன் போன்றோர் ஆங்கிலத்தில் எழுதினர். ஆனால் நூற்றாண்டின் பிற்பாதியில் பல குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றன ஆங்கிலம் அந்நியமொழி என்ற எண்ணம் மாறி, பயனுள்ள ஒரு சர்வதேச ஊடகம் என்ற எண்ணம் அரும்பியது. தம் தாய்மொழியில் நம் நாட்டவர்க்காக எழுதியவர்கள், அகன்ற திரையில் தம் ஆக்கங்களைத் தீட்டினால் அனைத்துலகும் கணிக்கும் என்ற எண்ணத்தால் ஆங்கிலத்தில் எழுதலாயினர். தமக்கெனச் சிறந்த இலக்கிய வளர்ச்சி பெற்ற மொழி இல்லாத ஆபிரிக்க நாட்டவர் ஆங்கிலத்தில் எழுதி உலக வாசக மட்டத்தில் புகழ் பெற்றனர். குடியேற்ற நாட்டு நிலை மாறிய நாடுகளில் ஆங்கிலத்தில் எழுதியவற்றை பின்குடியேற்றவாத இலக்கியம் என்றோ ஆங்கிலத்தில் புதிய இலக்கியம் என்றோ அழைத்தனர். இப்போது பொதுநலவாய நாடுகளின் இலக்கியம் என்ற தொடர் வழக்கிற்கு வந்து விட்டது. சுரண்டல் நிலை சிறிது மாறியதும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பரிணாமமாகத் தோன்றியதுமான பொதுநலவாயம் எங்கும், வெள்ளையர், கறுப்பர் என்ற பேதம் இல்லாமல், லாவகமாக ஆங்கிலத்தில் எழுதுவோரின் சிருட்டி இலக்கியங்கள் எல்லாம் தரமறிந்து இந்தப்புதிய இலக்கியவர்க்கமாகக் கற்றோர் உலகின் முன் வைக்கப்படுகின்றன.

சென்ற ஆண்டு எழுத்தாளர் அமிதாகோஷ் பிரதேசிய பொதுநலவாயப் பரிசைஎற்க மறுத்தார். ஏகாதிபத்தியம் தொடர்பானஎந்த விடயமும் சவால் விடாமல் ஏற்கப்படும் நிலை இங்கு இல்லைஎன்பதை இது உணர்த்தியது.

'பொதுநலவாய எழுத்தாளர் பரிசு 2000' பிரதேசிய தலைவராகக் கடமையாற்றுபவர் பேராதெனிய பல்கலைக்கழகத்து ஆங்கிலத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி லால்ரர் பெரேரா கூறுகிறார்.

ஆங்கிலத்தில் எழுதிய குடியேற்ற நாட்டு எழுத்தாளர்கள்பற்றிகுறிப்பாக, அச்சேபே ங்குகி.சோயிங்கா போன்றவர்களின் ஆக்கங்களை நாங்கள் பல்கலைக்கழகத்தில் இருந்த போதேபடித்தோம். ஆபிரிக்க பல்கலைக்கழகங்களில் அவர்களைப் பற்றிப் படிப்பதற்கு வெகுகாலத்துக்கு முன்னரே படித்தோம் அது ஒரு முக்கிய முயற்சி.

### இலக்கியப் பரிசுத் திட்டம்

1987ல் பொது நலவாய ஃபவுண்டேஷன் என்ற அமைப்பு இந்த இலக்கியப் பரிசுத்திட்டத்தை ஏற்படுத்தியது சமகால ஆங்கில ஆக்கங்களுக்கு. முக்கிமாக நாவல் இலக்கியத்திற்கு ஒரு தூண்டுதல் அளிப்பதே இதன் நோக்கம். இதனால் அந்த இலக்கியம் பிறந்த நாட்டுக்கு வெளியிலும் அது வாசகர்களைக்குச் சென்று அடையும்.

இப்பரிசு இரண்டு வகையான இலக்கியங்களுக்காக அளிக்கப்படுகிறது; (1) மிகச் சிறந்த நூல் (2) மிகச்சிறந்த முதலாவது நூல்; பிரதேச மட்டத்தில் நடுவர்கள் தெரிவு செய்த முதன்மை வாய்ந்த படைப்புக்கு 2002 ம் ஆண்டு பதினாயிரம பவுண் பரிசு வழங்கப்படும். முதலாவது நூலுக்கு 3000 பவுண் பரிசாகும்: பிரதேசங்கள் (1) ஆபிரிக்கா (2) ஐரோப்பிய ஆசியா (3) கரீபியன்-கனடா, (4) தென்கிழக்கி ஆசியா தென் பசுபிக் என நான்கு ஆகும்.

### இலங்கையர்

ஐரோப்பிய ஆசிய பிரதேசத்துள் இலங்கை இந்தியாவுடனும் இங்கிலாந்துடனும் போட்டியிட வேண்டும். முன்னர் இலங்கை எழுத்தாளர்களான புண்ணியகாந்தி விஜயநாயக, ஜீன் அரச நாயகம், டீ. சீ. ஆர். ர. குணதிலக, ராஜீவவிஜயசிங்க ஆகியோர் நடுவர்களாகப் பணி புரிந்துள்ளனர். ஆனால் இம்முறை இலங்கையர் ஒருவர் பிரதேசிய தெரிவுக் குழுவின் தலைவராயுள்ளார். அவரே அனைத்துலக மட்டத்தில் முதற் பரிசைத் தெரியும் குழுவிலும் அங்கம் வகிப்பார். இறுதிப்பரிசைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் நான்கு பிரதேசிய குழுத் தலைவர்கள் பொதுநல வாயஃபவுண்டேஷன் நியமிக்கும் மாண்புமிகு விமர்சகர் நூலாசிரியர் ஒருவரின் தலைமையில் ஆய்வு செய்தே முடிவு எடுப்பர்.

2001 தைக்கும் மார்கழிக்கும் இடையில் பிரசுரித்த உரை நடை நூல்கள் தெரிவுக்கு உரியன. நாடகம், கவிதை இதனுள் அடங்கா. மாசி 2002 ல் இக்குழு இங்கு கூடும் இதில் கலாநிதி பெரேராவுடன் ஆங்கில எழுத்தாளர் ஜீடித் பாமரும், இந்திய எழுத்தாளர் நர்மிதா சேகலேயும் பங்கு பற்றுவர் (இவருடைய 4 நாவல்களில் எத்தனை எம் வாசகர்களுக்கு எட்டியதோ?)

இலங்கை புலம்பெயர்ந்த எழுத்தாளர் சிவானந்தன் 1999 ல் பிரதேசிய பரிசைப் பெற்றார் அவரது நூல் ''நினைவு இறக்கும் போது'' இதற்கு முன்னரோ, பின்னரோ இலங்கையர் எவரும் பரிசு பெறவில்லை. □

**செல்வி வீ.நளாயினி**
வரணியூர்

---

**மலையக மாணவர்க்கு**

# பல்கலை அனுமதியை அதிகரிக்க வெட்டுப்புள்ளி குறைக்க வேண்டும்

## வேலாயுதம் எம். பி.

(கொழும்பு)

மலையகத்தைச் சேர்ந்த மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை அதிகரிக்கும் வகையில் 10ஆண்டுகளுக்காவது அவர்களுக்குவெட்டுப் புள்ளியைக் குறைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சரை நான் வற்புறுத்துவேன் என்று ஐக்கிய தேசியக்கட்சியாராளுமன்ற உறுப்பினர் கே. வேலாயுதம தெரிவித்துள்ளார்

ஹட்டனில் அஜந்தா விடுதியில் ஆதரவாளர்கள் அவருக்கு அளித்த வரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம முடிந்த பின்னர்கடந்தகாலத்தில் அவரது செயற்பாடுகள் பற்றி விமர்சனம் செய்வதில் அர்த்தம் இல்லை. ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருக்கும் போதே அவரது பிழைகளை அவருக்கு நேரே எடுத்துக் கூறவேண்டும். அப்பிழைகளை அவர் ஏற்றுக் கொள்ளத் தயாராகவும இருக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் மலையக மக்களுக்கு அநீதிகள் செய்யப்படுமானால்அவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கத் தவறமாட்டேன் என்றும்தெரிவித்தார், (எ-8)

# இரத்தக் கறையுடன் ஜீப் வண்டி மீட்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த தேர்தலின் போது மடவளையில் இடம்பெற்ற 10 முஸ்லிம இளைஞர்களின் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் டிபெண்டர் ஜீப்வண்டி ஒன்று. இரத்தக்கறையுடன் கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபன களஞ்சியப் பகுதியில் இருந்து விசேட பொலிஸ் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ் வாகனத்தைச் செலுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் இராணுவக் கோப்ரல் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரி குலசிறி உடுகம தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் இராணுவ வீரர்கள் உட்பட பலரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர். (உ-3)

# யாழ் சமூக மேம்பாட்டிற்கு 17 லட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்காக உள்ளூராட்சி அமைச்சு 17 லட்சம் ரூபாவை வழங்க, இருக்கிறது.

இந்தப் பணம் சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்குவது. மகப் பேற்று நிலையங்களைப் பராமரிப்பது, பொது நூலகங்களை மேம்படுத்துவது, மலசலகூடங்களை பராமரிப்பது ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படவுள்ளன

யாழ் மாவட்டத்தில் செயற்பட்டுவரும் சனசமூக நிலையங்களுக்கு 7 லட்சத்து 94 ஆயிரமரூபாவும் மகப் பேற்று நிலையங்களுக்கு 4 லட்சம் ரூபாவும், பொது நூலக அபிவிருத்திக்கு 3 லட்சம் ரூபாவும் மலசலகூட பராமரிப்புக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. [எ-8]

# உப அஞ்சல் நிலையம் அமைக்க கோரிக்கை

[திருநெல்வேலி]

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மணற்காட்டு கிராமத்துக்கு உப அஞ்சல் நிலையம் ஒன்றை அமைக்ககோரி, மேற்படி பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் யாழ்ப்பாணம் தபால் அத்தியட்சகருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ-43)

# இராசி பலன்

2-1-2002
(மார்கழி 18, புதன்)
திருதியை நப 11.54 வரை
ஆயிலியம் மு இ 10 32 வரை
ராகுகாலம் 12.30-2.00
சுபநேரம் 5.00-6 30
சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்**
உடல்நலக்குறைவு, புதிய திருப்பம், தர்மம், சொத்துக் கவால் நன்மை,

**இடபம்**
நினைத்தகாரியம் கைகூடும் சகோதரர் உதவி, கூட்டு முயற்சி, பிரயாணம்.

**மிதுனம்**
வாக்குக் கலகம், மாதர் நட்பு, காரிய தாமதம், பண விரயம்,

**கடகம்**
ஜனவசியம், பொருள் சேர்க்கை, முயற்சி நிறைவேறும், போசன சுகம்.

**சிங்கம்**
சுபசெலவு, முயற்சி தாமதம், திடீர் நன்மை, நித்திரைக் குறைவு.

**கன்னி**
காரியம் கைகூடும், தன வரவு, கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி.

**துலாம்**
அதிகாரம், தொழில் மேன்மை, சுபநிகழ்வு, மன மகிழ்ச்சி.

**விருட்சிகம்**
வீண்பயம், புதிய தொழில் சிந்தை, பிரயாணம், கட்டுப்பாடு.

**தனுசு**
உறவினர் மனஸ்தாபம், உடல் நலக்குறைவு, காரிய தாமதம, பிரயாண பயம்.

**மகரம்**
கௌரவம், சிநேகிதர் சந்திப்பு, காரிய அனுகூலம், தனலாபம்.

**கும்பம்**
தொழில் முன்னேற்றம், முயற்சிகைகூடும் உடல்நலம், போசன சுகம்.

**மீனம்**
உடல்சோர்வு, காரியஇடையூறு, தொழில் நன்மை, திடீர் மனஸ்தாபம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# சுருக்கெழுத்தாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

2001, ஆம் ஆண்டுமுற்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாண சேவையின்தமிழ் சுருக்கெழுத்தாளர் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்காக நடத்தப்பட்டபோட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கடந்தஒக்ரோபர் மாதம் யாழ். கல்வி வலயத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 14 பேருக்கு டிசம்பர் 18 ஆம் திகதி முதல் நியமனங்கள வழங்கப்பட்டுள்ளன.

இவர்களில் 11பேர் வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தின் உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (உ)

# பிரதம மதிப்பீட்டாளர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

கொழும்பு செல்லும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பிரதம மதிப்பீட்டாளர்களை நாளை காலை 8.00 மணிக்கு சகல பிரயாண ஒழுங்குகளுடனும் யாழ்ப்பாண சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்கு சமுகம் தருமாறு கல்வித் திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ-19)

# நிம்மதிகொண்டு புலர்!

விடிந்தால் நம்வீதியில் இனி
வெடியோசை வேண்டாம் - உயிர்
ஓடிந்து ஒடிந்து விழும்
ஓலங்கள் வேண்டாம்
இந்த வாழ்க்கை முடிவதற்குள் - தம்
சொந்தம் சேர்ந்து சோகம் மறந்து
அந்தியை அடித்து விரட்டி
ஆறுதல் வெளிச்சம் ஏற்றி
பந்தங்கள் பகிரவேண்டும்
வெந்தபுண்ணில் வேல்பாய்ச்ச வேண்டாம்
உடைத்தல், உடமை எரித்தல் போதும் - இனி
படத்தில் கூடபடுகொலை வேண்டாம்
கத்தும் கடல்ஓசை போதும்
யுத்தச் சத்தங்கள் வேண்டாம்
வெடிக்கும் பட்டாசுகள் போதும் - வேறு
வெடி ஓசைகள் வேண்டாம்
புத்தம் புதிய புத்தாண்டே - .நீ
நித்தம் நாம் மகிழ
நிம்மதி கொண்டு புலர்!

-என்.தனுசுஜன்
சண்டிலிப்பாய்

# சமாதான சூழ்நிலை நீடிக்கட்டும்

## புத்தாண்டுச் செய்தியில் ஈ.பி.ஆர்.எல்.எவ்

கடந்த கால்நூற்றாண்டாக யுத்தமும், மரணமும் அகதி வாழ்வும் சமாதானமும், என்று வாழும் எமது மக்களின் உணர்வுகளில் பற்றிய புதிய நம்பிக்கைகள் புதிய ஆண்டு பிரசவமாகும் காலத்தில் உருவாகி யுள்ளன.

இதேபோன்ற நம்பிக்கைகள் 1980களின் நடுப்பகுதியில் இந்திய இலங்கை கைச்சாத்தாகி இந்திய அமைதிகாப்புப்படை இலங்கை வந்தபோதும், 1990களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் போதும் ஏற்பட்டன. துரதிஷ்டவசமாக யுத்தம் என்பது நீடித்து நிலவுவதாகவும், சமாதான நம்பிக்கைகள் சில கணப்பொழுதுகள் மாத்திரமே என்றவாறு கடந்த இரண்டரை தசாப்த வரலாறு முழுவதும் காணப்பட்டது.

தற்போதைய சமதான சூழ்நிலை நீடித்து நிலவ வேண்டும் என்பதே பெருவாரியான மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்வதே சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் கடமையாகும் என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. சகல இன மக்களிடையேயும் சமாதானமும், தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை இனமக்களதும் தமது இனத்துவ ரீதியான சமத்துவத்தை எட்டுவதற்கான நிலைமைகளை ஏற்படுத்துவதுமே இன்றைய வரலாற்று பணியாகும் இந்தப்பணியை நிறைவு செய்வதற்கு சகல அரசியல் சக்திகளும் குறுகிய நலன் களுக்கு இடமளியாது அர்ப்பணி உணர்வுடனும், தியாகத்துடனும் செயற்பட வேண்டியது இன்றைய காலகட்டத்தில் தேவையாகும்.

இந்த கால் நூற்றாண்டு காலத்திலும் பலிகொள்ளப்பட்ட பல்லாயிரம் மக்கள், போராளிகள், ஏனைய மனிதர்கள் யாவருக்கும் செய்யும் சிறப்பான மரியாதையாக அது இருக்கமுடியும்.

இடம் பெயர்வினாலும், பொருளாதாரத் தடையினாலும் பட்டினி வறுமையுடன் போராடிக் கொண்டிருக்கும் எம் மக்களின் மனதில் சிறு நம்பிக்கை ஒளியை யாவது ஏற்ற முடியும். புத்தாண்டு மக்களின் நம்பிக்கைகளை எதிர்பார்ப்புக்களை உறுதி செய்வதாக இருக்கட்டும். அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# விடிவுடனே வருக

புத்தாண்டே வருக!
புதுமையுடன் வருக!
இத்தனை ஆண்டும் பட்ட
இன்னல்கள் போதும் இனி.
சொற்பனங்கள் பல கண்டோம்
அத்தனையும் கற்பனை தான் - இனி
புத்தாயிரத்திரண்டில் புலர்கின்ற
புது ஆண்டே!
வித்தாரமாய் நாம் வாழ்வதற்கு
விடிவுடனே வந்திடுவாய்.

ஆக்கம்
லலிதா சிவப்பிரகாசம்
யாழ்.பல்கலைக்கழகம்.

# யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்திருப்பது நிம்மதியையும் – மகிழ்வையும் தருகிறது

## புத்தாண்டுச் செய்தியில் ஈ.பி.டி.பி

புதிய ஆண்டு புதிய நம்பிக்கைகளையும், புதிய எதிர்பார்ப்புக்களையும் தோற்றுவித்தவாறு பிறக்கின்றது. தினசரி ஒவ்வொரு உதயமும் வெவ்வேறு சமிக்ஞைகளைத் தந்துகொண்டிருக்கின்ற போதும் மோதல் தவிர்ப்பும், போர் நிறுத்தமும் தொடர்ந்து பேணப்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சி தருவதாகும்.

யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்து போயிருப்பது நிம்மதியை தருவதாகும். இதனால் மக்கள் பண்டிகைகளை மகிழ்ச்சியான மனிநிலையில் கொண்டாக்கூடியதாகவுள்ளது.

பிறக்கின்ற புது வருட நீண்ட காலமாக நீடித்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் மன வலிமையை எல்லாத் தரப்புக்கும் தர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு ஆகும். எமது மக்களும் எமது நாடும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வைத் தேடுதல் மார்க்கத்தில் எல்லாத் தரப்பினரும் ஒத்துழைப்போடு முன்னேறிச் செல்ல வேண்டும் அந்த வகையில் சமாதானத் தூது கொண்டு வரும் ஆண்டாகப் புதுவருடம் அமைய வேண்டும்.

சந்தர்ப்பங்களை உருவாக்குவதும் உருவாகிவரும் சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்துவதும் தான் வெற்றிக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களைஉருவாக்காமல் இருப்பதோ உருவாகிவரும் சந்தர்ப்பங்களை சரியான முறை யில் பயன்படுத்தாமல் விடுவதும் எதிர்காலத்தை கேள்விக்குறி யாக்கவே வழிவகுக்கும். எனவே இப்போது உருவாகியுள்ள சூழ லைத் தகுந்த முறையில் பயன் படுத்தி எமது மக்களுக்கு நிம்மதி யான ஒளிமயமான எதிர்காலத் தைக் கொண்டு வருவதற்கான சம்பவங்கள் இனிவரும் நாட்களில் தொடர வேண்டுமென விரும்புகிறேன்.இவ்விருப்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரியதாகட்டும்

# அமைதி அளிப்பாய், புத்தாண்டே!

முரண்பா டகற்றி அமைதி போரெனும்
இரண்டில் வேண்டும் அமைதி அளித்து
வரண்ட மனங்களில் விடியல் தரவே
இர்ண்டா யிரத்து இரண்டே வா! வா!!

-நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்-

# புத்தாண்டில் பூட்டும் பா!

அமைதியைத் தாவென அழிவினைப் போவென கூறினோம் -
'நம்பி' - ஆறினோம்!
நின்மதி வருமென, நியாங்கள் தருமென
நம்பினோம் - பின் - வெம்பினோம்!

இம்முறையாவது; வந்தநல் வருடமே
உண்மையாய் - நீ - நன்மை தா!
'கும்' மென 'தொம்' மென; கொட்டிடும் குண்டினை
அழித்திடு - வதை - கழித்திடு!!

மண்ணிலே போரினை இம்முறை நிறுத்து நீ
ஆறுவோம் - மனம் - தேறுவோம்!
கண்ணியமான வருடமாய் இம்முறை
மாறு நீ - பதில் - கூறுநீ !!!

ரீ.ரீ.மயூரன்

# பித்தர்கள் ஆகி விட்டோம்

எத்தனை துன்பங்கள் பட்டோம் வாழ்வினில்
எல்லாம் நீங்கிட வரவேண்டும்
சத்திரம் தேடியே ஓடிய மாந்தர்கள்
சந்தோச வாழ்வினைப் பெறவேண்டும்
சத்தியம் நிலைத்திட சாந்தியும் பெருகிட
புத்தாண்டே நீயும் வரவேண்டும்.,

- அபிர்ராஜன்-


JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA

Regd. No. 15251 T.P.3335

தொழிற் பயிற்சிகள்

* RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீ. வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் Computer Monitor, UPS, printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன மோட்டார் (F) பான ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு, Three phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)

* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும் (காலம் 6 மாதங்கள்)

* CITY AND GUILDS OF LONDON EXAM
(1) POWER (2) ELECTRONICS

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
07.01.2002 (கிழமை நாள்களில்)
12.01.2002 (சனி, ஞாயிறு நாள்களில்)

IN VIEW OF OUR 2nd ANNIVERSARY

மேலதிக விபரங்களுக்கு நேரில்
-DIRECTOR

266/01, Stanley Road,
Jaffna.
(றெயில்வே கடவை அருகில்)

No. 7, Palaly Road,
Jaffna.

(C /3087)

# சமாதான மலர் தூவி நடைபோடு புத்தாண்டே

## சமாதான ஆண்டே சிரித்து வா!

சத்தியம் ஓங்கிட நித்தமும் ஓங்கிட
சமரச வாழ்வு தரணியிலே மலர்ந்திட
பித்தம் பிடித்தவையும் அகதி வாழ்வு
அகன்றிடபுதுமலராய் வருவாய் புத்தாண்டே !

வாழ்வினிலே வசந்தம் வளமாய் வீசிட
வான் எட்டும் புகழோடு நாம் வாழ்ந்திட
யாழ் மண்ணிலே அமைதி நிலவிட
யாவரும் போற்றிட வருவாய் புத்தாண்டே!

கலைந்துபோன கனவுகள் நனவாகிட
கடிதினிலே இன்ப வாழ்வு மலர்ந்திட
நிலையான வாழ்வும் நிம்மதியும் நிலைத்திட
தரணி போற்றிட வருவாய் புத்தாண்டே!

கவிநேசன் த.
அஜந்தகுமார்.

## புத்தாண்டே புதுமைத் தருவாய்

புது ஆண்டனில்
புதுமைகள் பல தந்து
புனிதப் பூமியாய்
புத்தாண்டே...........
புதிய வாழ்வைத்தா ......

புதிய அரசு பதவி யேற்று
புதிய கொள்கைகள் பல வகுத்து
புத்துயிர் அளிக்க முன் வந்து
புதிய மாற்றம் தனை தந்து
புதுயுகம் படைத்திட
புத்தாண்டே - நீ
புதுப் பொலிவாய் வந்திடு....

நாகமணி - மகேந்திரலிங்கம்
வ. க. கு. அ. இ. (65)

## நன்மைகளையேந்தி வா!

தேரா அரசும் தெளிந்தது போல் காட்ட
துவேசத்தின் சுவடுகளும் சற்றே மறைய
ஆரவாரமாய் ஆட்சி மாற்றம் தென் பூட்ட
இனிய எதிர் பார்ப்புக்களை சுமந்தேங்கி

தீராப் பிரச்சனைக்கு தீர்வு வருமென
வடு தாங்கும் நெஞ்சாங்களாற
இரண்டாயிரத்து இரண்டாமாண்டே நீயும்
நன்மைகளை ஏந்தி நாமுய்ய வா!

கந்த தியாகராசா - J.P

## புத்தாண்டே புலர்

வயிற்றுப் பசிக்கு வழியின்றி வாடும்
ஆயிரத்து மாந்தர்தம் அவலம் ஒழிய
ஒலிக்காதோ முரசம் ஒழியாதோ மாயை
பழி சொல்லும் அற்பர்கள் படிய
- புத்தாண்டே புலர்.

செல்வி. ஜெனிதா - இராசதுரை.

## புத்தாண்டே புறப்பட்டு வருக!

ஆண்டு தோறும்
தப்பாமல் மலர்ந்திடும்
புத்தாண்டே - நீ
ஆறாத்துயரில் மூழ்கிட்ட
தமிழினத்தை
ஆதரித்து காத்திட
புறப்பட்டு வருக!

பரமசாமி - தனேந்திரா.

# 2002

## தீர் வோடு வந்தால்...... வரவேற்போம்.

திசைகள் எங்கும் தீப்பிளம்பாய்
நிலைகள் அற்றுப் போனதோ
வழிகள் எங்கும் குழிகளாக
வாழ்க்கை நொந்து போனதோ
விடிவு இன்னும் தொலைவிலில்லை
வீரக் குலமே பொங்கடா
இனிமை இதோ ! வருகிறது
இரவு கூட இனிக்கிறது
அழுத விழிகள் சிரிக்கிறது
அவனி மெல்ல நனைகிறது
ஈழம் மட்டும் விதிவிலக்கா
இன்றே விடிவு வருகிறது
பொழியும் வானம் பொழியட்டும்
பூக்கள் சலங்கை கட்டட்டும்
தென்றல் வீணை மீட்டட்டும்
தீர் வோடு வந்தால் புத்தாண்டே
ஊர் கூடி உன்னை வரவேற்போம்
இல்லை! ஓடியே விடு.

கு. றஜீபன்.

## சிரித்திட வா புத்தாண்டே !

ஈராயிரத்தோடு இரண்டும் வந்தாச்சு
விடிந்த பொழுதெல்லாம் போராச்சு
இருண்ட காலங்கள் திரண்டாச்சு
இன்றுவரை வாழ்க்கையோ
அலையாச்சு

புத்தாண்டு பலதோ போயாச்சு
பத்தாண்டு கூடிய வயசாச்சு
புரண்ட புழுதியோ புதராச்சு
உருண்ட விழிகளுள் நீராச்சு

செத்தாண்டுகள் வந்த நினைவாச்சு
சீரான்ட இடமோ சிதைவாச்சு
சிந்தித்த மனமோ கல்லாச்சு
சிரித்திட வாராயோ புத்தாண்டே !

ம. பிறேமலதா,
க.கு.அ.இ. 153

## இன்பப் புத்தாண்டே வா!

கனவுகள் கலைந்த கண்ணீர் நிறைந்த
கொடிய வாழ்வு கடிதினிலே மறைந்திட
தனம் அழித்து தரணியிலே எம்மைத்
தினம் வருத்தும் யுத்தம் ஒழிந்திட
தினம் மனமகிழ்வுடனே நாம்
தித்திக்கும் வாழ்வைப் பெற்றிட - தமிழ்
இனம் என்றுமே இன்பமுடன் வாழ்ந்திட
இன்பப் புத்தாண்டே இனிதே வா!

திருமதி. கமலாதேவி தர்மராஜா

## சமாதானம் கனிந்திட வருக.

ஆண்டாண்டு அணிதொடர் புத்தாண்டு
வரிசையில்
ஈண்டு பிறந்த ஈராயிரத்து இரண்டாண்டே!
நீண்டவன்பகை வடுக்கள் மாண்டு மறைந்திட
வேண்டுமமைதி விரைவாய் விதைத்திடு
புத்தாண்டே!

அஞ்சிய வாழ்வது அடியோடு அகன்றிட
சிந்திய குருதியின் சிறப்பை நாம் பெற்றிட
விஞ்சியே பல்லின மக்களும் மகிழ்ந்திட
துஞ்சிய சமாதானம் சமைத்திடு புத்தாண்டே!

மனிதத்தை மனிதன் மாய்த்திடல் மறைந்திட
சமூகத்தின் எதிரியாம் ஆபாச மதுமோகம்
தகர்ந்திட
புனிதத்தைப் பேணியே புதுயுகம் படைத்திட
கனிந்திடு புத்தாண்டே கவினுறு புது நாளதை.

கொழும்புத்துரையூர்,
எஸ். யேசுதாஸ்.

## இன்பமாய் எழுந்து வா! வா!

உணர்வினை யூட்டி யிங்கு
உரத்து நல் வசனம் பேசி
ஒற்றுமை காப்போ மென்று
உரிமைக்காய்ச் சென்றவர்கள்
இரண்டாயிரத்து இரண்டு தன்னில்
இழந்ததை மீட்டாரென்று
இப்புவி இயம்பும் வண்ணம்
இன்பமாய் எழுந்து வா! வா!!!

கவிமணி க. ஆனந்தராசா.

## புதுமையுடன் வரவேற்கிறேன்

வீசிவரும் தென்றலுடன்
வீரியமாய் வந்திடவே!
ஆடிவரும் கடல் அலையுடன்
ஆனந்தமாய் வந்திடவே !
பொங்கு தமிழ் மொழியுடனே
புதுமையுடன் வந்திடவே !
புத்தாண்டே உன்னைப்
புதுமையுடன் வரவேற்கிறேன்.

வீ.ஜெனனி
வட்டுக்கோட்டை

## "மக்களுக்கான தீர்வு"

இனி வருவன நல்லவையாக
அமையும் எனம் நம்பிக்கையிலே
அரசாங்கத்தின்ர் ஆக்கபூர்வ
திட்டங்களை முன்னேடுக்கின்றனர்.
தீர்க்கப்படக் கூடிய தான
முடிவினை எடுத்து இன்னல் பட்டு.
மூலை முடுக்குக்களில் எல்லாம்
வாழும் எமக்கெல்லாம் நல்லதொரு
வழியை எதிர்பார்த்து
எதிர்க்கப்பட்டு வரும் புது வருடத்தை.
எதிர் கொண்டு காத்திருக் கின்றோம்.
எம்மையெல்லாம் படைத்த.
எம் ஆண்டவரே காத்தருள வேண்டும்.

கி. தப்திகா
அல்வாய் மேற்கு.

## இன்று ஒரு தகவல்

### முழுமையே நிறைவு

சிற்பி ஒருவன் சிலை செய்யும் வேலையில் ஈடுபட்டான் பல நாட்கள் முயற்சிக்குப்பின் அழகான சிலை உருவாயிற்று, தொடர்ந்த வேலையினால் சோர்வடைந்த சிற்பி 'எப்படியோ பாறையின் ஒரு புறத்தில் அழகான பெண் உருவத்தைக் கொண்டுவந்து விட்டேன். மறுபுறத்தைச் செம்மை செய்யவில்லை. பார்க்கிறவர் கண்ணுக்கு மறுபுறம் தெரியப் போவதில்லை எதற்காக வீண சநான்கைந்துநாட்கள் உழைத்து அதைச் செய்ய வேண்டும்' என்று நினைத்தான்.

திடீரென்று அவன் உள்ளத்தில் 'பிறரை ஏமாற்றுகின்றவன் தன்னையே ஏமாற்றுகின்றான். பார்க்கின்றவர்களுக்கு வேண்டுமானால் மறுபக்கம் உள்ள குறை தெரியாமல் இருக்கலாம். எல்லாம் வல்ல கடவுளிடம் இதை எப்படி மறைப்பது? என் உள்ளமே என்னை வாழ்நாள் முழுவதும் துன்புறுத்தாதா? என்ற எண்ணம் தோன்றியது.

தன் உள்ளம் நிறைவடையுமாறு சிலையின் மறுபுறத்தையும் செம்மை செய்த பின மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டான் சிற்பி.

பேராசிரியர் எ. சோதி

# காணாமற்போனோர் வழக்கினை
# கொழும்பிலிருந்து யாழிற்கு மாற்றுக

## காணாமற்போனோர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் சம்பந்தமான வழக்குகள் கொழும்பிலே நடைபெற்றுக் கொண்டிருப்பதால் எம்மால் அங்கு செல்லமுடியாதுள்ளது எனவே அந்த வழக்குகளை யாழ்ப்பாணத்திற்கு மாற்ற வேண்டும் என்று வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் சங்கத்தினர் யாழ். அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போனோர் பற்றிய தகவல்களை தமக்குப் பெற்றுத்தரவேண்டும் என்று கோரி யாழ். அரசாங்க அதிபரிடம் நேற்றுமுன்தினம் பி. ப 4-30 மணியளவில் ஒரு மகஜரை கையளித்த பின்பு அவரிடம் உரையாடும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

காணாமற்போனோரில் 167 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்பதை எமக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அத்துடன் காணாமற்போனோர் சம்பந்தமான விடயங்களுக்கு தனியான ஒரு விசாரணைக் குழுவை அரசு அமைக்க வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

காணாமல் போனோர் பற்றிய விபரங்களை அறியும் பொருட்டு, ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடிய போது, 18 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் மிகுதியாகவுள்ள 257 பேருக்கும் தாமே பொறுப்பு என்றும் கூறினார்.

அரசாங்க அதிபர் உறவினர்கள் மத்தியில் பேசுகையில், காணாமல் போனோர் சம்பந்தமான சகல விபரங்களையும், அவர்கள் எவ்வாறு எங்கே கைது செய்யப்பட்டார்கள் என்ற விபரங்களை தனக்குத் தருமாறும் தான் இவ்விடயம் பற்றி விரைவாக புனர்வாழ்வு மீள் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவிற்கு அவற்றைக் கையளித்து ஆக்கபூர்வமான முடிவு காண உதவுவதாகவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் மனித நேய அமைப்பின் தலைவர் எஸ். பரமநாதன், செயலாளர் ஏ. ஜே. சுப்பிரமணியம் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பருத்தித்துறை அமைப்பாளர் சு. ம; செபஸ்ரியன் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-19.2)

## நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கலில் முறைகேடு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப்பகுதி விவசாயிகளுக்கு அண்மையில், வழங்கப்பட்ட நஷ்டஈட்டுக் கொடுப்பனவில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளில் பாதிப்படைந்தவர்களுக்கு அதனை ஈடுசெய்யும் முகமாக 3 ஆயிரம் ரூபா அண்மையில் நீர்வேலிப் பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் பலருக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படாததுடன், அரச உத்தியோகத்தர் மற்றும் விவசாயசம்மேளனங்களின் உறவினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ)

## பட்டிருப்பு பாலம்விசேட அதிரடிப்படை வசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளையும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளையும் இணைக்கும் பட்டிருப்பு பாலத்தைவிசேட அதிரடிப்படையினர்கடந்த வெள்ளி முதல் பொறுப்பேற்றுள்ளனர்.

இதுவரைகாலமும்களுவாஞ்சிக்குடிபொலிஸாரே பாலத்தில் காவல் கடமையில ஈடுபட்டதுடன், பாலத்தினூடாக பயணம் செய்வோரை சோதனையிட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மணற்காட்டில் நடமாடும் சுகாதார சேவை ஏற்படுத்த வலியுறுத்து

(திருநெல்வேலி)

மணற்காடு பிரதேசத்திற்கு ஓர் நடமாடும் மருத்துவ சேவையை ஏற்படுத்தித் தருமாறு கோரியும் அதற்கான காரணங்களை விளக்கியும் அப்பகுதி கிராமஅபிவிருத்திச் சங்கத்தினால் சம்பந்தப்பட்ட பிரதேச சபை ஊடாக சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

150 குடும்பங்கள வாழ்கின்ற எமது பிரதேசத்தில சுமார் 50 இற்கும் அதிக கர்ப்பிணித்தாய்மாரும் குழந்தைகளும் உள்ளனர்.

இவர்கள் தமது சுகாதார வைத்திய சேவைகளைப்பெற்றுக் கொள்ள 13 கி. மீற்றருக்கு அப்பால்உள்ளமந்திகை ஆதார வைத்தியசாலையை நாட வேண்டியுள்ளது ஆனால் எமது கிராம வீதிகள சீரின்மையால அங்கு செல்வது கடினமாகவுள்ளது என அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-43)

## ஜனாதிபதி ஊடகபிரிவுக்கு புதியபணிப்பாளர் நாயகம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஊடகப்பிரிவின் புதிய பணிப்பாளர் நாயகமாக ஜனதாச பீரிஸ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்;

பிரபல ஊடகவியலாளரான இவர் வெகுஜன தொடர்புத்துறை அமைச்சின் செயலாளராகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், லேக்கவுஸ் பத்திரிகையின் ஆசிரியர் பீட ஆலோசகராகவும் பணியாற்றியவர் என்பதும்.

ஊடகத்துறையில் இவர் நாற்பது ஆண்டு அனுபவம் மிக்கவரென்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-4)

## உலக அரங்கில் தமிழ் மலேசிய மாநாட்டிற்கு மனோன் மணிக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 5, 6 ஆம் திகதிகளில், உலக அரங்கில் தமிழ்' எனும் விடயத்தில் அனைத்துலக மாநாடு ஒன்று சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பங்குபற்றிக் கட்டுரை படிப்பதற்காகக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அழைக்கப்பட்டுள்ளார்.

மலேசியப் பல்கலைக்கழக இந்தியவியல் துறையின் புறநிலைத் தேர்வாளரும ஆலோசகருமான பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## காணாமற் போனோரின் விபரங்கள் மீள் பதிவு

(யாழ்ப்பாணம்)

கைதாகி காணாமற்போனோர் தொடர்பான முழு விபரங்களையும் யாழ். அரச அதிபர் கோரியிருப்பதற்கிணங்க, அவர்கள் தொடர்பான விபரங்களை, சகல ஆவணங்களுடனும்வந்துஅரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய அலுவலகத்தில் பதியுமாறு கைதாகி காணாமற் போனோர் பெற்றோர் சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்கமைய கோவை இல. 1-35 வரை - இன்று 2 ஆம் திகதியும் இல. 36 - 71 வரை -3 ஆம திகதியும், இல. 72-107 வரை – 4 ஆம் திகதியும், இல. 108 - 143 வரை - 5 ஆம் திகதியும் இல. 141 இல் இருந்து - 6 ஆம திகதியும் பதிவுகள மேற்கொள்ளப்படவிருப்பதால், உரியவர்களை காலை 9.00 மணிக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-2-19)

## அமைச்சர் மகேஸ்வரன் வரணிப்பகுதிக்கு விஜயம்

### மக்கள்குறைகளை கேட்டறிவு

(வரணி)

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், நேற்று முன்தினம் தென்மராட்சியின் வரணிப் பகுதிக்கு விஜயம் செய்து. அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்.

அத்துடன், பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் மூடப்பட்ட பாதைகளை திறப்பது தொடர்பாக வரணிப் பகுதிப் படைத்தளபதியுடன் நேரில் சென்று கதைத்து. மேறபடி பாதை திறப்பு தொடர்பாக இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தியதுடன்,

மக்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில்,

★ பருத்தித்துறை கொடிகாமம் பஸ் சேவையை விஸ்தரிப்பது;

★ வரணியூடாக யாழ். நகருக்கான போக்குவரத்துச் சேவையை விரைவாக ஆரம்பித்தல்.

★ மின்சார வசதியை உடனடியாக வழங்குதல்;

★ அடிப்படை வசதிகளைச் சீர் செய்து மீளக்குடியமர வசதி செய்தல் ஆகிய உறுதிமொழிகளை வழங்கினார்.

(உ-211)

## ஆசிரியர் பயிற்சி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 2002ஆம் ஆண்டிற்கான புதிய ஆசிரிய மாணவர்களைத்தெரிவு செய்வதற்காக ஏப்ரல் மாதம்விண்ணப்பங்கள் கோரப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-9)

## அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தை ஜயலத்திடம் ஒப்படைக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை காரணமாக குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும இன்னல்களையும் கருத்திற்கொண்டு ஜனாதிபதியின்கீழ் உள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களதலைமை டாக்டர் ஜயலத்ஜயவர்த்தனாவின் அமைச்சிடம் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா கருத்துக் கூறுகையில்;

ஜனாதிபதியின் கீழுள்ள இந்தத் திணைக்களத்தை எனது அமைச்சின் கீழ் கொண்டுவராதுவிடின் எனது அமைச்சினாலாவது இரண்டு கப்பல்களில் பொருட்களைக் கொண்டு செல்வேன்.

ஆனால், அதற்கான நிதிப் பற்றாக்குறையும் ஏற்படுள்ளது.

குடாநாட்டிலுள்ள மக்கள் மீது ஜனாதிபதிக்கு உண்மையான பற்றுதலும், அன்பும் இருப்பின் இத்திணைக்களத்தை எனது அமைச்சின் கீழ் வழங்குவார் என்றே நினைக்கிறேன்என்று குறிப்பிட்டார். (உ)

## அரசாங்கநிறுவனங்கள் இலாபம் பெற புதியவழி

### அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதில் தவறில்லை என பொதுநிர்வாக முகாமைத்துவ புனரமைப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்களை இலாபம் பெறும் நிறுவனங்களாக மாற்றியமைக்க, நடைமுறைகளில் புதிய மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்:

தனது அமைச்சில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் துறையில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ)

## சிந்தனைக்கு விருந்து

### குறை எங்கோ?

'நாடு பிறிதொன்றை நாடா வளத்ததே
நாடெ'ன்றார் வள்ளுவனார் நம்மவர்கள் – நாடிப்
பிறநாடு செல்லப் பெரிதும் விரும்பும்
குறை யெங்குண் டென்பதைநீ கூறு.

-பழையவன்

# பயங்கரவாதத்தை வெற்றிகொள்ள இந்தியர்கள் உறுதிபூண வேண்டும்

## புத்தாண்டுச் செய்தியில் வாஜ்பாய் அறை கூவல்

(புதுடில்லி)

பயங்கரவாதத்தை வெற்றி கொள்வோம் என்று ஒவ்வொரு இந்தியனும் உறுதிகொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமர் புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான எமது போராட்டம் நீண்ட நெடியதாக இருக்கும் என்பதை, நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஒருவழியில் பார்க்கப் போனால் இந்தியன் ஒவ்வொருவனும் போர் வீரனே,

இந்தியர்கள் ஒவ்வொருவரும் போர் வீரர்களைப் போன்று கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்றும் அவர்களைப் போன்று தியாகங்கள் செய்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்றும் பிரதமர் வாஜ்பாய் அச்செய்தியில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இராணுவ ரீதியில் வெற்றி பெறமுடியாத பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைத் தூண்டி விடுகிறதென்றும் அதனால் எதனையும் சாதிக்க முடியாதென்றும் தெரிவித்தார். (து)

## சேதமாக்கப்பட்ட புத்தர்சிலைகளைமீளமைக்க ஆப்கான் அரசுமுனைப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியின்போது சேதமாக்கப்பட்ட வரலாற்று புகழ் மிக்க பாமியான் புத்தர் சிலைகளை புனரமைக்க ஆப்கானின் இடைக்கால அரசு நடவடிக்கை எடுக்க உள்ளதாக ஆப்கான் தகவல் மற்றும் கலாசார அமைச்சர் றகீத் மன்சூன் தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்திற்கு உலக நாடுகள் பலவும் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளதாவும் ஆயினும், தற்போது அமைக்கப்படவிருக்கும் புத்தர்சிலைகள் நூறு வீதம் முன் இருந்ததைப் போன்று அமையாது என்றும் கூறப்படுகிறது. (ஏ-02)

## இந்திய தொலைக்காட்சி தடை

(இஸ்லாமபாத்)

இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கேபிள் மூலம் வழங்குவதற்கு பாகிஸ்தான் தடை விதித்துள்ளது. இத் தடையை மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்கப்படும் என்றும், கேபிள் உரிமையாளர்களின் உரிமை ரத்து செய்யப்படும் என்றும் பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் கூறி உள்ளார். (ஏ-02)

## சுரங்க வெடிவிபத்தில் 5 ஆயிரம் பேர் பலி

(பீக்கிங்)

சீனாவின் நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 18 பேர் கொல்லப்பட்டதுடன் 31 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சுரங்கத்தில் 200 பேர் கடமைபுரிந்ததாகவும் இதனால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

இந்தவருடத்தின் நவம்பர் மாதம்வரை 5 ஆயிரம்பேர் சுரங்க வெடிவிபத்தில் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## எதிர்ப்பு நடவடிக்கையில் இடைக்கால அதிபர் பதவி விலகினார்

(டுகுமான்)

ஆர்ஜென்ரீனாவின் புதிய இடைக்கால அதிபர் பதவி விலகியுள்ளார்.

பதவியேற்று 7 நாட்களில் இடைக்கால அதிபர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

தனது பதவிவிலகலுக்குரிய காரணத்தை தெரிவிக்கையில் தரைமட்டமாகியிருக்கும் பொருளாதாரக் கொள்கைகளை முன் வைத்த போது தனது கட்சிக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாக அறியத் தந்தார்.

பதவியேற்ற இரண்டாம் நாளே ஆர்பாட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கி விட்டதாகவும் வன்முறைகள் ஏற்பட்டதாகவும் ஏற்கனவே வந்த செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

## இந்தியா தொடர்பில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளில் நூற்றுக்கணக்கானோர் யுத்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே ரயில் விமானப் போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த பாகிஸ்தான் ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லாகூரிலிருந்து வாகாபி வரை வழிநெடுகலும் மெழுகுவர்த்தி மற்றும் பதாதைகளுடன் மக்கள் சென்று எல்லைக் கோட்டைச் சாத்தவிடாது அங்கிருந்தோரைத் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது. (து)


## விளையாட்டு செய்திகள்


## இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபையின் தலைவராக அபயசேகர

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு 7பேர் கொண்ட புதிய இடைக்கால சபை ஒன்றை விளையாட்டுத் துறைஅமைச்சர் ஜோன்ட்டன் பெர்ணான்டோ நியமித்துள்ளார்.

இந்தஇடைக்காலசபையின் தலைவராக விஜய அபயசேகரவும் உப தலைவராக மைக்கல் ரிசேவாவும் செயலாளராக குசில்குணசேகராவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னைய இடைக்கால சபையில் இருந்த 5 பேர் இச்சபையில் மீண்டும் இடம் பெற்றுள்ளனர்.

கிரிக்கெட் சபைக்கானதேர்தல்கள நடைபெற்று புதிய தலைவர் பதவி ஏற்கும வரை இவ் இடைக்கால சபை பதவியிலிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

## மேற்கிந்திய தீவுகள் பெண்கள் கிரிக்கெட் அணியின் இலங்கை பயணம் ரத்து

(கொழும்பு)

இலங்கை வரவிருந்த மேற்கிந்திய தீவுகள் பெண்கள் கிரிக்கெட் அணிதனதுசுற்றுப் பயணத்தைதிடீரென ரத்துச் செய்துள்ளது.

இதற்குப் பதிலாக பாகிஸ்தான் பெண்கள கிரிக்கெட் அணி இலங்கை வரவுள்ளது.

பாகிஸ்தான் பெண்கள் அணி ஒரு டெஸ்ட்போட்டியிலும், மூன்று ஒரு நாள் போட்டியிலும்விளையாடவுள்ளது.

இவற்றில் ஒரு டெஸ்ட் போட்டியும், இரண்டு ஒரு நாள் போட்டியும் கொழும்பிலும் ஒருநாள போட்டி கண்டியிலும் நடைபெறவுள்ளது.

16பேர் கொண்ட மேற்படி பாகிஸ்தான் பெண்கள அணிக்கு பஸ்னா கானும் இலங்கை அணிக்கு சுதர்சினி சிவநாதனும்தலைமை தாங்கவுளளனா.

இவ் வருடம் நியூசிலாந்தில் நடைபெற்ற பெண்கள் உலகக் கிண்ண போட்டிக்கு உபதலைவராக இருந்த சுதர்சினி 2005இல் தென்னாபிரிக்காவில நடைபெறவுளள பெண்கள உலகக் கிண்ணப் போட்டிக்கும்தலைமைதாங்கவுளவார், என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

## எகிப்து சம்பியன்

(கெய்ரோ)

மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத் தொடரில் எகிப்து அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. (உ-2)

## கும்ளேக்கு மகிழ்ச்சியில்லை

(புதுடில்லி)

டெஸ்ட் போட்டியில் 300 விக்கெட்டுக்கள் வீழ்த்தியது எனக்கு பெரிய மகிழ்ச்சியிலலை என்று இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் அனில் கும்ளே கூறியுள்ளார்.

கபில்தேவ் 434 விக்கெட்டுக்களை பெற்று சாதனையாளராக உள்ள நிலையில் அவரின் சாதனையை முறியடிக்கதான் முயல்வதாகவும் கூறியுள்ளார். (உ-2)

## இலங்கை மூன்றாவது இடத்தில்

(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள டெஸ்ட்நாடுகளின் தரப்படுத்தலில், அவுஸ்திரேலியா முதலாமிடத்திலும், தென்னாபிரிக்கா இரண்டாமிடத்திலும் இலங்கை மூன்றாமிடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளது. (உ)

## 54 அதிகாரிகள் இந்தியா திரும்புவர்

(இஸ்லாமபாத்)

இந்தியா, பாகிஸ்தானிலிருந்து அழைக்கவுள்ள 54 அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை அந்நாட்டு வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளிடம் கையளித்துள்ளது.

இதன்படி மேற்படி அதிகாரிகள் கடந்த சனிக்கிழமை இந்தியா திரும்புவதாக இருந்தது. ஆனால் பாகிஸ்தான் தூதரகம் விடுத்த கோரிக்கையினால் ஜனவரி 5 ஆம் திகதிவரை அவர்கள் இந்தியா திரும்புவது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஏ-02)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சலனசித்திரம் யாழ்ப்பாணக் கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டமும் திரைப்படத் தொழில் நுட்ப வகுப்பும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில்இடம்பெறவுள்ளது. (உ-106)

## ஞானச்சுடர் மாதஇதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' மார்கழி மாத இதழ் வெளியிடப்பட்டுள்ளது. (செ)

## பல்கலை அணி பதக்கம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் 29,ம் 30ம், திகதிகளில்பேராதனை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகம் 4 தங்க,5 வெள்ளி, வெண்கலப் பதக்கங்கலளப் பெற்றுக் கொண்டுள்ளது. (செ)

## பேரரை அடியோடு பாகிஸ்தான் வெறுக்கிறது

(காட்மண்டு)

இஸ்லாமாபாத் போரை வெறுக்கிறதென்றும் எல்லைக் கோட்டுப் பகுதியில் இராணுவம் ஒரு போதும் போரைத் தொடங்காது என்றும்பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல்சதாத் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய ஒத்துழைப்புச் சங்க (சார்க்) அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் கலந்து கொள்ள நேற்று முன்தினம் காட்மண்டு போய்ச் சேர்ந்த வேளை அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சொல்லிலும் செயலிலும் தனது கடமைப் பற்றுடன் நடந்து வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தியவெளியுறவு அமைச்சருடன் அப்துல் சதாத்விரைவில்பேசலாமென்றும்தெரிய வருகின்றது. (து)

## லக்ஷறிஇ தொய்பாவின் தலைவர் கைதானார்

(இஸ்லாமபாத்)

லக்ஷறிஇ தொய்பா இயக்கத் தலைவரை கைது செய்துள்ளதாக பாகிஸ்தான் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் சட்டம் ஒழுங்கைப் புறக்கணிக்கக் கோரி கூட்டங்களில் ஆவேசமாக பேசி மக்களைத் திசை திருப்பினார்என்ற குற்றத்திற்காக இவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பாராளுமன்றம் மீது தாக்குதல் நடத்திய லக்ஷறிஇ தொய்பா மீது பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்ற அவ் அரசின் குற்றச்சாட்டிற்கு இது பதிலளிப்பதாக அமையும என நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இவர் 9) நாட்கள் மாத்திரமே சிறையில் வைக்கப்பட்டிருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

எமது வாடிக்கையாளர்களுக்கு ஜெசித்தாரா தரும் புதுவருட வெகுமதி குங்குமப்பூ புரியாணி வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் வேடிக்கையான மூவர்ண கலண்டர் இனாம் மற்றும் உணவு வகைகளை பெறுபவர்களுக்கும் கலண்டர் இனாம்! கையிருப்பு முடியும் வரை முந்துங்கள். படைக்குப் பிந்தினாலும் பந்திக்கு முந்துங்கள்.

ஜெசித்தாரா

உங்கள் விருந்தகம்

19/3 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.

★ சுவையின் மறுநாமம் - ஜெசித்தாரா
★ உங்கள் அடுத்த உணவு வேளைக்கு-ஜெசித்தாரா

[கி-3103]

நாடொறும் நாடி முறைசெய்யாமன்னவன்
நாடொறும் நாடு கெடும்
- குறள்

# வலம்புரி

## போராட்டம் அவசியம்

1996 ம் ஆண்டின் நடுப்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் யாழ் மக்கள் மீளக் குடியமர்ந்த போது கைதுசெயயப்பட்டு காணாமற் போனோரின் கதை முடிவேயில்லாத தொடர்கதையாகச் செல்கிறது.

பொது ஜனஐக்கிய முன்னணி அரசின் காலத்தில் நடந்த கைதுகளும் காணாமல் போன நிகழ்வுகளும் இன அழிப்பின் ஒரு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள்,யுவதிகளின் முகங்களோ,முகவரிகளோ தெரியாதவாறு மறைக்கப்பட்டதெனில் அதன் உள்ளடக்கம் எப்படியிருந்திருக்குமென்பதை எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

காணாமல் போனோரின் விடயத்தில் தெரிவுக் குழுக்களும், விசாரணைக் குழுக்களும் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றால் பிள்ளைகளை - இல்லத் தலைவர்களை இழந்த குடும்பங்களின் ஏக்கத்திற்கு - எதிர்பார்ப்புகளுக்கு தகுந்த பதிலளிக்க முடியாது போய்விட்டது.

மாறாக காணாமல் போனோரைக் கண்டறிய அமைக்கப்பட்ட குழுக்களும் காணாமல் போய் விட்டது.

இந் நிலையில் யாழ் செயலகம், அரச அதிபர் என பிள்ளைகளைஇழந்தபெற்றோர் அலைந்து திரிகின்றனர்.

உண்மையில் அரச அதிபர் அரசாங்கத்தின் நிர்வாக வண்டியை இயக்குபவராக இருப்பினும்காணாமல் போனோர் விடயத்தில் அவரும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மனித நேய அமைப்புக்களுக்கும் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கும் நன்கு தெரியும். இநநிலையில் காணாமல்போனோர் தொடர்பாக யாழ் அரச அதிபருடன் சந்திப்பு - பேச்சு என்பதெல்லாம் வெறும் சம்பிரதாயமும் பத்திரிகைக்கான செய்தியுமே தவிர இவற்றால் ஆவது எதுவுமில்லை.

சுருங்கக் கூறினால் யாழ் செயலகத்தில் காணாமல் போனோர் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தனிப்பட்ட முறையில் அரசஅதிபருக்கு சிக்கல் கொடுப்பதாக இருக்குமேதவிரவேறொன்றுமில்லை.

எனவே காணாமல் போனோர் சங்கம் மனித நேய அமைப்புகள் யாவும் இணைந்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

# ஆதிஅணுவினின்றும் அகிலம் தோன்றியபின்னர்
# உயிரினங்கள் தோன்றப் பலகோடி ஆண்டுகள்

நள்ளிரவில் எழும்பிக் கண்களைக் கசக்கிக்கொண்டு வானத்தைப் பார்க்கிறோம். என்ன தெரிகிறது? வெள்ளிகள், வெள்ளிகள்! இவை எல்லாம் என்ன?

விண்ணிலே தோன்றும் வெள்ளிகள் சில கண் சிமிட்டுவன. அதாவது விட்டு விட்டு ஒளிர்வன. அவை உடுக்கள் அல்லது நட்சத்திரங்கள் எனப்படுகின்றன. வேறு சில ஒளிப்புள்ளிகள் இடையீறின்றித் தொடர்ந்து ஒளிர்வன. இவை கிரகங்கள் (அல்லது கோள்கள்) எனப்படும். நமது பூமி ஒரு கோள் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, யுறேனஸ், நெப்ற்றியூன், புளுட்றோ ஆகியனவும் கோள்கள். அவை சூரியனைச் சுற்றி வருவன. சூரியன் ஓர் உடு-நமக்கு மிகவும் கிட்ட உள்ள உடு சூரியன்.

சூரியன் பால் வழி என்ற உடுக்கொத்தில் ஓர் உறுப்பினன். பால் வழி 'ஆகாய கங்கை' எனவும் படும். பால் வழியில் மிகப்பல உடுக்கள் உள்ளன. அவற்றுட் சிலவற்றுக்குக் கோள்கள் இருக்கக் கூடும்.

பால்வழி போல மேலும் பல உடுக்கொத்துக்கள் விண்வெளியில் உள்ளன. இவ்வாறான உடுக்கொத்துக்கள் பல சேர்ந்த தொகுதிதான் பேரண்டம், விசுவம், அகிலம், பிரபஞ்சம் என்றெல்லாம் பெயர் பெறுவது. 'உலகெலாம்' என்று பேசப்படுவதும் இந்த அகிலம் தான்.

### ஆதி அணு

அகிலப் பிறப்பியல் எனப்படும் துறையில் விஞ்ஞானிகள் செய்த ஆய்வுகளின் பேறாக. ஓரளவு திட்டவட்டமான மனப்படம் ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது. துண்டும் துணுக்குமான தரவுகளிலிருந்து கணித முறைப்படி உய்த்தறியப்பட்ட பிரபஞ்சப் படம் இது.

இதன்படி, இந்த அகிலம் ஐந்நூறு கோடி ஆண்டுகளின் முன்னர் நேர்ந்த ஒரு பிரமாண்டமான திடீர் வெடிப்பின் தொடர் விளைவு என்று கருதப்படுகிறது. அகிலத்துச் சடப்பொருள்கள் யாவும் ஒரு காலத்திலே ஒடுங்கிக் குறுணியாகிச்சிறுத்திருந்தன. இந்தக் குறுணியை ஆதிஅணு (பிறிமிவல் அற்றம்) என்பர்.

அந்த ஆதி அணு. ஒரு குறிப்பிட்ட கணத்தில் படீர் என்று வெடித்துப் பரந்தது. அந்த வேளை தான் அகிலம் பிறந்த வேளை-பிரபஞ்சம் பிறந்த கணம்! பிரபஞ்சம் பிறந்த காலம் இற்றைக்கு ஐந்நூறு கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொன்னோம். அதற்குமுன்பு நிலைமைகள் எப்படி இருந்தன? நாங்கள் காலக்கப்பலில் பின்னோக்கிச் செல்வோம். (கற்பனையிலே தான்!) சிந்தனைக்கும் எட்டாத அந்தப் பழைய காலத்தை 'சய முடிவிலி' என்று கணிதம் கூறும். அநாதி என்ற பழைய பதம் குறிப்பதும் இந்தச்சயமுடிவிலியைத் தான் அநாதி தொடக்கம் இல்லாதது.

அநாதி தொட்டு அகிலப் பிறப்புக் கணம் வரையுமுள்ள நெடிய காலப்பகுதியில். அகிலப் பொருள்கள் எல்லாம் ஒரு பிரமாண்டமான ஒடுக்கத்துக்கு உள்ளாகிக்கொண்டு இருந்தன. அந்தப் பழம் பொருள்கள்எப்படிப்பட்டன என்ன நிலையில் இருந்தன

**முருகையன்**

என்பதை நாம் அறியோம். ஏனென்றால் அவற்றின் தடயங்கள், சான்றுகள், சுவடுகள் எல்லாம் மேற்படி பேரொடுக்கத்தின் போது கூழாய்க் குறுகிச் சிறுத்து அழிந்தொழிந்து போய்விட்டன.

### புதிய அகிலம்

ஆதி அணு வெடித்த பின்னர், அண்டவெளிப் பொருள்கள் மறுபடியும் விரிவடைந்து முற்றிலும் உருக்குலைந்த நிலையிலே தான் வெளிப்பட்டிருக்க வேண்டும். அப்படி வெளிப்பட்ட துணிக்கைத் திரளிலே எலெக்ட்ரன்கள், புறோற்றன்கள், நியூட்ரன்கள் முதலியன இருந்தன. இய்நிலம் (Ylem) எனப்படும் அந்தத் துணிக்கைத் திரள் மேலும் விரிந்து பரந்து வளர்ந்தபோது மேற்படிஅடிப்படைத் துணிக்கைகள் ஒன்றோடொன்று ஒட்டுப்பட, பல்வேறு படித்தரம் உள்ள சிக்கற்பாட்டுடன், இன்றுள்ள பல்வேறு விதமான அணுக்கருக்களின் முன்னோடிகள் தோன்றலாயின. அணுக்கருக்கள் 'சமைக்கப்பட்ட' அந்தக் காலப் பகுதி ஒரு மணித்தியாலத்தைவிடக் குறைந்ததாகவே இருக்கலாம்- அந்த வேளை பிறப்பெடுத்த அந்தப் புதிய அகிலத்தின் இயல்புகள் எப்படி இருந்திருக்கும்? ஓர் அணுக்குண்டு வெடிக்கும் போது அதன் மையத்திலுள்ள நிலைமைகளைப் பெரிதும் ஒத்தனவாகத் தான் அவை இருந்திருக்கும். அண்டவெளியிலே காமாக் கதிர்கள் நிரம்பியிருந்தன. அவற்றின் திணிவடர்த்தி சாதாரண அணுப்பொருளின் அடர்த்தியினை விட அதிகமாய் இருந்தது. அகிலம் முழுவதிலும் வெப்பநிலை 10 பாகையை விட அதிகமாய் இருந்தது. ஆனால் சடப்பொருளின் அடர்த்தியோ நம் வளிமண்டலத்தின் உயரங்கூடிய இடங்களில் உள்ள அடர்த்தியை ஒத்ததாய் இருந்தது.

### உடுக்கொத்துக்கள்

அகிலம் பிறந்தபின் தொடர்ந்த முதல் மணித்தியாலத்திலே மும்முரமான மாற்றங்கள் பல இடம்பெற்றன. ஆனால் அதற்குப் பிற்பட்ட 30 மில்லியன் ஆண்டுகள் வரை குறிப்பிடத்தக்கதாய் ஒன்றும் நடைபெறவில்லை. புதிய அணுக்களைக் கொண்ட வாயு மண்டலம் தொடர்ந்து விரிந்தது அதன் வெப்பநிலை குறைந்து வந்தது. அகிலத்தின் இளமைப் பொழுதினிலே கதிர்வீச்சுச் சக்தியின் பங்களிப்புப் பெரிதாய் இருந்தது. 30 மில்லியனாவது ஆண்டளவில் கதிர்வீச்சைவிட, சடப்பொருள்கள் முதன்மை பெற்றன. அவற்றின் முக்கிய இயல்பாயுள்ள (நியூற்றோனியன்) ஈர்ப்பு விசைகள் செயற்படத் தொடங்கின. இதுவரை ஒரு படித்தாய் இருந்த வாயுக்கள உடுமேகங்களாய்ப் பிரிந்து கொண்டன. இவற்றில் இருந்துதான் உடுக்கொத்துகள் பிறந்தன. அந்தக் காலத்திலேயே அறை வெப்பநிலை (றூம் ற்றெம்பறேச்சர்) நிலவத் தொடங்கிவிட்டது அப்பொழுதுவானம் வெதுவெதுப்பாய் இருந்தாலும் இருள் சூழ்ந்ததாய்க் காணப்பட்டது.

### உயிரினத் தோற்றம்

ஆதி உடுக்கொத்துகள் விரிந்து விரிந்து பாவிப் பிரிந்தன அவற்றுள் இருந்த சடப்பொருள் ஒடுக்கமுடைய திரணைகள் உருவாயின. அத்திரணைகள் ஆதி உடுக்கள் எனப்படும். இவை ஒப்பீட்டளவிற் சிறியவை ஆகையால், மிக விரைந்து சுருக்கம் அடைந்தன. இதனால் ஐதரசனோடு பல்வேறு இலேசான மூலகங்களும் தாக்கம் புரியக் கூடிய அளவுக்கு ஆதி உடுக்களின் உள்ளிட வெப்பநிலை அமையலாயிற்று. பல்வேறு விதமான உடுக்கள் தோற்றம் பெற்றன. வான்வெளி மீண்டும் ஒளி பெற்றது. ஆதி உடுக்கொத்துகளின் வாயுக்கள் ஒடுங்கி உடுக்கள்பிறந்தபோது அவ்வாயுக்களின் ஒரு பகுதி உடுக்களின் அயலிலே மிச்சமாய் இருந்தது. இதிலிருந்து கோள் மண்டலங்கள் உருவாயின. கோள்கள் மிகச் சிறியனவாகையால், அவற்றிலிருந்து அணுக்கருச்சக்தி தோன்றவில்லை. அவை விரைந்து குளிர்ந்து பாறைப்படலங்கள் ஆயின. பிறகு கோள்கள் தத்தம் உடுக்களிலிருந்து பெற்ற கதிர்வீச்சின் உதவியினால் அந்தக் கோள்களிலிருந்த சில இரசாயனச் சேர்வைகளிலிருந்து இன்னும் நாம் விளங்கிக்கொள்ளமுடியாமல் உள்ள ஒருவகைக் கூர்ப்பின் பேறாக உயிரினங்கள் தோன்றின. எளிமையான அந்த உயிரிகள் மெல்லமெல்ல மாற்றம் பெற்று சிக்கற்பாடு மிக்க வடிவங்களைப் பெற்றன. வெறுமையான பாறைப்பரப்பில் புல், செடி, கொடி, மரங்கள் தோன்றிப் பொலிந்தன. ஆதி விலங்குகள் மெல்ல மெல்லக் கூர்ப்படைய மனிதர் தோன்றினர். அவர்தம் நுண்ணறிவு விரிந்தது. தாம் தோன்றுவதற்குப் பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த விருத்தாந்தங்களையும் உய்த்தறியும் ஆற்றல் அவர்களுக்குக் கிட்டிற்று.

### கால அளவுகள்

இதில் உள்ள விந்தை என்னவென்றால், அகிலாண்டத்தின் வரலாற்றுக் காலப்பரப்பிலே ஒரு சிறு கடுகளவான நேரத்தினுள்ளே பொருள்மயமான அகிலம் தோன்றிவிட்டது உயிரினத்தின் பரிணாமமோ மிகமிக மெதுவாக, எத்தனையோ கோடானுகோடி ஆண்டுகளாக நடைபெற வேண்டி இருந்தது.

அணுக்களைப்படைக்க ஒரு மணித்தியாலங் கூடத் தேவைப்படவில்லை. உடுக்களைப் படைக்க சில பத்துக் கோடி ஆண்டுகள் தேவைப்பட்டன. ஆனால் மனிதனை உருவாக்கவோ ஐந்நூறு கோடி ஆண்டு காலம் வேண்டியதாயிற்று.

''மாந்தரின் சரிதை
மகத்துவம் பெரிதே''

ஆதாரம்: த கிறியேஷன் ஒஃவ் த யூனிவே(ர்)ஸ்' - ஜோஜ் கமவ்.

## தினசரி தியானம்

## தொண்டு

உண்டு உடுத்துப் பூண்டு இந்த உலகத்தார்
போல் திரியும்
தொண்டர் விளையாட்டே சுகங்காண் பராபரமே

- தாயுமானவர்

ஆருயிர்க் கெல்லாம் அன்புடன் தொண்டுபுரியும் ஆர்வத்தை அண்ணலே, எனக்கு நீ நல்குவாயாக.

சேவை செய்பவன் மனத்தை விட்டு வேற்றுமை விலகிவிடுகிறது. மன்னுயிரைத் தன்னுயிர் போல்அவன் கருதுகிறான். வேறறானாகஇருந்தவன் சேவையின் மூலம் தனக்கு உற்றவன் ஆய்விடுகிறான்.

அங்ஙனம் ஒற்றுமை நிலை நாட்டப்படுகிறது ஐக்கிய உணர்ச்சி வளர்கிறது. அதினின்று நல்லறிவு ஓங்குகிறது. தொண்டு என்னும் பெருவாய்ப்புஎல்லார்க்கும் சொந்தமானது அதைப பயன்படுத்தாதவன் வாழ்ந்தும் வாழாதவனாகிறான். மனமே, சேவையே உன்னை மேலோன் ஆக்குகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# முறைசாராக் கல்விப்பிரிவு போதனாசிரியர் சம்பளம் 4 மாதமாக இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய முறைசாராக் கல்வி பிரிவு போதனாசிரியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

தமது சம்பளம் வழங்கப்படாமை தொடர்பாக மேற்படிபோதனாசிரியர்கள்முறைசாரா கல்விப் பிரிவில் உள்ள உயர் அதிகாரி ஒருவரைக் கேட்ட போது, கணக்காளரிடம்கேட்குமாறும், கணக்காளரிடம் கேட்டபோது முறைசாராக் கல்விப் பிரிவில் உள்ளவர்கள் இன்னும் அதற்கான வவுச்சர் அனுப்பவில்லை என்று கூறியதாகவும் இப்படியாக ஒருவரை ஒருவர் கேட்குமாறு கூறப்படுகிறதன்றி தமது பிரச்சினைக்கு முறையான தீர்வு எட்டப்படவில்லை என்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)








இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவு அண்மையில் பத்திரிகையாளர் பயிற்சி நெறியை ஆரம்பித்திருந்தது. ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அருள்திரு ரூபன்மரியாம்பிள்ளை அவர்கள் மங்கள விளக்கை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும் ஆரம்ப நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரபல எழுத்தாளரும் மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை முகாமையாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வர், வலம்புரி செய்தி ஆசிரியர் மு.வாமதேவன் சங்கத் தலைவர் டாக்டர் வை. தியாகராஜா உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் பயிற்சியில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பொருளாதாரத் தடைநீக்க விவகாரம்

# அரசுக்குப் பலதரப்பாலும் அழுத்தம்

## திரிசங்கு நிலையில் ஐ.தே.முன்னணி

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாரற்ற வன்னிப்பகுதிக்கான பொருளாதாரத் தடைநீக்கம் சம்மந்தமாக ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு பாரிய அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சரவை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கு முழுமையா பொருளாதாரத்தடையை நீக்கக் கூடாதென பல உயர்மட்டங்களில் இருந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுவருகின்றது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராணுவ உயரதிகாரிகள் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய தலைவர்கள் பலர் என வெவ்வேறுபட்ட தரப்பினர் பொருளாதாரத் தடையை வன்னிக்கு நீக்கக் கூடாது தென்பதில் விடாப்பிடியாக நிற்பதாகவும் இதனால் அரசு பொருளாதாரத் தடையை நீக்கம் தொடர்பாக உறுதியான கொள்கையற்று இருப்பதாகவும் தெரியவருகிறது.

வன்னிக்கான பொருளாதாரத்தடை முழுமையாக நீக்கப்படுமென்று வெளியிடப்பட்ட தகவல்கள் தற்பொழுது மாற்றமடைந்து ஒரு சில பொருட்களுக்கே தடை நீக்கப்படுமெனவும் ஏனைய பொருட்களுக்கான தடைகள் கால ஓட்டத்திலேயே நீக்கப்பட முடியுமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

உடனடியாக மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு மட்டுமே தடை நீக்கப்படுமெனவும் யுத்தத்தோடு தொடர்வுடைய பொருட்கள் உரவகைகள் சீமெந்து மற்றும் எரிபொருட் களுக்கான தடைகள் நீக்கப் படமாட்டதெனவும் தெரியவருகி றது. (இ)

### துப்பாக்கி..

இதேவேளை காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்க கொண்ட சென்ற அவர்களது உறவினர் ஒருவர் அதிர்ச்சியினால் மாரடைப்பு ஏற்பட்டு வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

காயமடைநத இரு பெண்களும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் உயிரிழந்த 55வயதான குடும்பஸ்தரின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையி வைந்திருக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

### உள்ளூராட்சி......படுமென்று

தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்படுவதற்குரிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கக் கிழக்கு உள்ளூராட்சி சபைத்தேர்தல் நடைபெற மாட்டாதென முன்னர் அறிவிக்கப்பட்டிருத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

### அமைச்சர்....

சிறந்த தலைமைத்துவமும் இளமைத்துடிப்பும் மிக்க அமைச்சர் காமினி அத்துக்கோறளை 1977ம் ஆண்டு நிவித்திகலை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு எம்.பியாகி அரசியலில் காலடியெடுத்து வைத்தார்.

இளைஞர் விவகார வேலைவாய்ப்பு பிரதியமைச்சராக ஆரம்பத்தில் பதவிவகித்த இவர் காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் காணி, நீர்ப்பாசன மகாவலி அமைச்சராகவும் பின்னர் வன வள அமைச்சராகவும் பதவி வகித்தார்.

இளவயதில் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளராக பதவிவகித்த இவர் காலமாகும் போது கட்சியின் பிரதித்தலைவராக இருந்தார்.

1994ம் ஆண்டுத்தேர்தலில் தோல்வியைத்தழுவிய ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்ற பெருமையும் இவரையே சாரும் (வ.உ.8)

### இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை

காலஞ்சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும் அமைச்சருமான காமினிஅத்துக்கோறளையின் இறுதிக்கிரிகைகள் எதிர்வரும் சனிக்கிழமை காவத்தையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் காமினி அத்துக்கோறளையின் மறைவையொட்டி இன்று முதல் எதிர்வரும் 5ம் திகதி சனிக்கிழமை வரை சகல அரச நிறுவனங்களிலும் வெள் ளைக்கொடியை பறக்க விடுமாறு பொது நிர்வாக அமைச்சர் வஜ்ஜிர அபயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்

### அரசு....

பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னயி முன்னாள் அமைச்சர் லஷ்மன் கதிர்காமரின் பெயரை சிபார்சு செய்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது

உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் நவீன கணினி வடிவமைப்பில் தரமான ஒவ்செற் முறையில் வெளியிட வலம்புரியை நாடுங்கள்

### நோர்வேயின்...

பேச்சுவார்த்தைக்கு உதவ நோர்வே அரசு சம்மதம் தெரிவித்ததை அடுத்து நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கு விடுதலைப்புலிகளும் தமது சம்மதத்தை தெரிவித்து பச்சைக் கொடி காட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கு விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்ததை அடுத்து நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் குழு பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது இதற்கு முன்னோடியாக இலண்டனில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் விரைவில் பேச்சுநடத்திவிட்டு இலங்கை வரவுள்ளதாகவும் அதன் பின்பே அரச பிரதிநிதிகளுடனும் விடுதலைப்புலிகளின் தலைவர்களுடனும் குழு பேசவிடுப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது

பொ.ஐ.மு அரசின் காலத்தில் சமாதான பேச்சின் ஏற்பாட்டாளரான எரிக் சொல்கெயிம் நோர்வேயின் ஏற்பாட்டாளர் குழுவின் ஒரு அங்கத்தவர் என்ற முறையில் அவரது பங்களிப்பு விடுதலைப் புலிளுடனான பேச்சுவார்த்தையின் பொழுது முக்கியபங்கு வகிக்கும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### வலிமேற்கு....

இதுஒருபுறம் இருக்க தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் பட்டியலில் தன்னை இணைத்துக் கொள்ளுமாறு திரிலோகநாதன் ஐ.தே.கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரிடம் கேட்ட செய்தியும் தற்போது மெல்லக்கசியத் தொடங்கியுள்ளது. (கு)

## கண்ணீர் அஞ்சலி



தமிழர்களின் வரலாற்று சின்னங்களை
ஆவணப்படுத்தி
தமிழ் இனத்திற்கே
தன்னை அர்ப்பணித்த

கலைஞானி

**அ.செல்வரெத்தினம்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
உபதலைவர்,
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி.

## நன்றி கூறுகின்றோம்

*யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாட்டுக்கான நிதியினை திரட்டும் முகமாக 31.12.2001(திங்கள்) எமது ஒன்றியத்தினால் "உதய கீதங்கள்" என்ற இசை நிகழ்வு நடாத்தப்பட்டது. இந்தநிகழ்விற்கு பல வழிகளிலும் உதவிய பல்கலைக் கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அன்பளிப்பு, விளம்பர அனுசரணை வழங்கியோர் இவற்றுக்கு மேலாக எமக்கு நிதி உதவியினை வழங்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும், நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.*
*நிகழ்வின்போது இரசிகர்களுக்கு ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டிருப்பின் அதற்காக நாம் மனம் வருந்துகின்றோம்.*

-யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

## வருகை தரவும்

2001 O/L *எடுத்த மாணவர்கள் அனைவரும் நாளை (03.01.02) பி.ப 4 மணிக்கு தவறாது சமூகம் தரவும்*

-இயக்குனர்
நல்லூர் சயன்ஸ் அக்கடமி



அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு....
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2002 அச்சிட்டு வெளியிடப்பட்டது.